AHARAM

# அகரம்

எண்: 12 எழுத்து: 10 ஒக்டோபர் : 2018 | முஹர்ரம் - ஸபர் : 1440

PUBLIC LIBRARY JAFFNA



## பேசும் பறவை

# மைனா

"வெற்றிகளுக்கு வேராய் இருந்தவர் எனது ஆசிரியர்தான்!"

-தேசிய கபடி அணியில் முதல் முஸ்லிம் வீரர்-
அஸ்லம் சஜா



50/= மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM
# அகரம்

எண்: 12 - ஒக்டோபர் : 2018 - எழுத்து: 10




பிரதம ஆசிரியர்
**எம். றிஸ்வி ஸுபைர்** M.Ed

**ஆலோசனைக் குழு**

**அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)**
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

**எம்.எச். எம். ஹஸன்** M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

**ஏ.ஆர்.எம். ஜிப்ரி** BEd, MEd

**அன்பு ஜவஹர்ஷா**
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
**வ. முஹம்மத் நபீல்**

தளக் கோலம்
**எம்.ஐ.எம். ஹரீஸ்**

சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 892 7350**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |



## ஆசிரியர்கள்: வாழ்நாளில் எப்போதும் வாழ்த்துக்குரியவர்கள்

ஒக்டோபர் 06 ஆம் திகதி ஆசிரியர் தினம் நினைவு கூரப்படுகிறது. எமது வாழ்விற்கு அர்த்தத்தைச் சொல்லித் தந்த உத்தம செயல்வீரர்களின் சேவை, தியாகம், அர்ப் பணிப்பு என்பவற்றை மீட்டிப் பார்ப்பதற்காகவே இந்த ஏற்பாடு உலகம் பூராகவும் கொண்டாடப்படுகிறது. இந் நிகழ்வு நாட்டுக்கு நாடு வேறுபட்ட தினங்களில் நினைவு படுத்தப்படுகிறது. இலங்கையில் 1994 ஆம் ஆண்டிலி ருந்து ஒக்டோபர் 06 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வருடத்திற்கான ஆசிரியர் தின தொனிப்பொருளாக ''கல்வி கற்பதற்கான உரிமை பயிற்றப்பட்ட சிறந்த ஆசிரி யர்களின் மூலமே நிறைவேற்றப்படும்'' **(The right to education means the right to a qualified teacher)** என்பதாகும்.

ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் தீர்மானிக்கப் படுகிறது என்பார்கள். அப்படியாயின், ஒரு நாட்டின் எதிர் காலத்தை வகுப்பறைகளில் வடிவமைக்கும் சிற்பிகள் ஆசிரியர்கள் என்பது நிதர்சனமானது. சமூகத்தில் எந்நிலை யில் உயர்ந்திட்ட ஒவ்வோர் ஆளுமையின் அத்திவாரங் களின் பின்னாலும் உறுதியாய் இருந்தவர்கள் ஆசிரியர்கள் என்பதை மறுதலிக்க இயலாது. பாடசாலையின் பௌதிக கட்டமைப்பிற்கும் மாணவர்களுக்கும் இருக்கும் உறவை விடவும் ஆசிரியர் - மாணவர் உறவு ஆழமானது. ஆகர்ஷ மானது. ஒரு மாணவன் தன்னுடைய பிளளைப் பருவத்தில் உலகை அறியாமல் வகுப்பறைக்குள் நுழையும்போது அவர்களை புன்னகைத்த உள்ளத்தோடும் எதிர்காலத் திற்கான நம்பிக்கைகளையும் எந்தவொரு வித்தியாசமும் இன்றி திசை காட்டும் தோணியும் ஏணியும் நம் ஆசான்கள் என்பதை பெருமையாக குறிப்பிடலாம்.

ஒரு மாணவனை எதிர்காலத்துக்கு ஏற்ற விதத்தில் உருவாக்கி சமூகத்திற்கு தயார்படுத்துபவர்கள் ஆசிரியர்கள் தான். சிலபோது பெற்றோர்களை விடவும் ஒரு மாண வனின் அனைத்து வித நலன்களிலும் அவர்கள் எடுத்துக் கொள்ளும் அக்கறை அலாதியானது. இதனாலேயே ஆசிரியர்கள் 'இரண்டாம் பெற்றோர்' என்ற அடைமொழி யில் சிறப்பித்து அழைக்கப்படுகின்றனர். இதனையே மாவீரர் அலெக்ஸாண்டர் ''நான் உயிரோடு இருப்பதற்கு, என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டி ருக்கிறேன'' என்ற ஆழமான கருத்தை அவரது வரலாற்றுக் குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

இவ்வாறு எமது வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்திய உத்தமர்களை ஒரு தினத்தில் நினைவுபடுத்துவதோ, கண்ணியப்படுத்துவதோ தர்மமாகாது. மாற்றமாக, எமது வாழ்வில் எல்லா தருணங்களிலும் அவர்கள் எமது வாழ்த்துக்கும் பிரார்த்தனைக்கும் உரியவர்களாக மாற வேண்டும். இதுவே நாம் எமது ஆசிரியர் குழாத்துக்குச் செய்யும் நன்றியாகவும் பாராட்டாகவும் அமையும்.

இப்படிக்கு
அன்புடன் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுக் கதை



# ஹலால் என்பது...

அகன்று விரிந்த பழத்தோட்டம் ஒன்றில் முபாரக் என்பவர் தொழிலாளியாக மிக நீண்ட காலம் வேலை செய்து வந்தார். இறையச்சமுள்ள அந்த இளைஞர் தனக்கு ஊதியம் வழங்கும் துருக்கிய வியாபாரியான முதலாளிக்கு எந்தவொரு துரோகமும் செய்ததில்லை.

ஒரு நாள் தன் தோழர்களுடன் வந்த முதலாளி தமக்கு சுவைக்க சில கனிகளை பறித்து வருமாறு கேட்க முபாரக்கும் சில கனிகளை பறித்து கழுவிக்கொண்டு வந்து கொடுத்தார்.

முதலாளியும் தோழர்களும் பழங்களை வாயில் வைத்ததுதான் தாமதம், அடுத்த நொடியே கசப்பின் காரணமாக வாயில் வைத்த கனிகளை வெளியே துப்பிவிட்டார்கள்.

முதலாளியின் முகத்தில் கோபம் பற்றியெரிந்தது. நண்பர்கள் முன் அவமானப்பட்டது அவரது கோபத்தை பன் மடங்காக்கியது.

''ஐந்து வருடங்களாக என்னிடம் வேலை செய்தும் எந்த மரத்தில் இனிமையான கனிகள் இருக்கின்றது என்று உனக்கு தெரியவில்லையா?'' என ஆவேசத்துடன் கேட்டார்.

''மன்னிக்க வேண்டும். நீங்கள் எனக்கு சம்பளம் தருவது இந்த தோட்டத்தை பராமரிக்கத்தான். அந்த வேலையை சிறப்பாகவே செய்து வருகின்றேன். அதைத் தவிர இந்த மரங்களில் இருந்து ஒரு பழத்தைக் கூட இதுவரை நான் சாப்பிட்டதில்லை'' என்றார்.

தனது பணியாளின் நேர்மையையும் உண்மையையும் கண்டு மகிழ்ந்த முதலாளி உடனே அவரை தன் ஆலோசகராக நியமித்துக் கொண்டார். பின்னர் தன் அருமை மகளையும் அவருக்கே திருமணம் முடித்துக் கொண்டார். பிற்காலத்தில் அந்த அழகிய தம்பதியினருக்கு ஒரு குழந்தை பிறந்தான். அவர்தான் மிகப் பெரும் அறிஞராக புகழ்பெற்ற **அப்துல்லாஹ் பின் முபாரக்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக ஜுன்துப் இப்னு அப்துல்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''பிறர் புகழ வேண்டும் என்பதற்காக ஒருவர் ஓர் அமலைச் செய்தால், மறுமை நாளில் அல்லாஹ் அவரை கேவலப்படுத்துவான். பிறருக்குக் காண்பிப்பதற்காக ஒருவர் ஓர் அமலைச் செய்தால் (மறுமையில்) அவரின் உண்மை நிலையை அல்லாஹ் அம்பலப்படுத்துவான்.'' (புஹாரி, முஸ்லிம்)

# ''முகஸ்துதி''

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

மனிதனை அவன் அறியாமலேயே நரகத்தை நோக்கி அழைத்துச் செல்லக் கூடிய விடயமான முகஸ்துதி பற்றியும் அதனால் மனிதன் அல்லாஹ்வின் முன் அடையும் இழிநிலை பற்றியும் இங்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

முகஸ்துதி என்றால் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை மாத்திரம் இலக்காகக் கொண்டு செய்யப்படவேண்டிய எந்தவொரு நற்காரியத்தையும் பிறரின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் செய்வதாகும்.

அதாவது இஸ்லாத்தின் பார்வையில் தொழுகை, அல்குர்ஆன் திலாவத், திக்ர், ஏழைகளின் துயர் துடைத்தல், கற்றல் மற்றும் நற்பண்பாடோடு நடந்து கொள்ளல் போன்ற நற்காரியங்கள் அல்லாஹ்விடத்தில் மாத்திரம் நற்கூலியை எதிர்பார்த்து செய்யப்பட வேண்டியவை.

எனினும், இத்தகைய நற்காரியங்களில் ஈடுபடும்போது மற்றவர்கள் இவன் ஒரு நல்ல மனிதன் என்ற எண்ணத்தோடு தன்னைப் பார்க்க வேண்டும்; பேச வேண்டும் என்ற ஆசையோடு ஈடுபடுவது கூடாது. இதனை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மற்றுமொரு தடவை பின்வருமாறு எச்சரித்தார்கள்.

''அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி கற்கப்பட வேண்டிய கல்வியை உலக புகழைப் பெற்றுக் கொள்வதற்காக கற்பவன் மறுமையில் சுவனத்தின் வாடையைக் கூட நுகர்ந்து கொள்ள மாட்டான்.'' (அபூதாவூத்)

ஷைத்தானுக்கு மிகவும் விருப்பமான ஒன்றாகவும் மனித உள்ளத்தை மிக இலகுவாக ஈர்க்கக் கூடிய ஒன்றாகவும் முகஸ்துதி காணப்படுகின்றது.

அல்குர்ஆனில் இது விடயத்தில் அல்லாஹ் பின்வருமாறு கூறியுள்ளான்:

''அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பாது மக்கள் புகழ்வதற்காகத் தமது செல்வத்தைச் செலவிடுவோர் (ஷைத்தானின் நண்பர்களாவர்) யாருக்கு சைத்தான் நண்பனாகி விட்டானோ அவன் மிகக் கெட்ட நண்பனாவான்.'' *(அந்நிஸா: 38)*

அல்லாஹ்வுடைய இடத்தை பிற மனிதனுக்கு வழங்குகின்ற ஒன்றாக முகஸ்துதி காணப்படுவதால் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முகஸ்துதியை மறைவான இணைவைப்பாக கூறி விட்டு ''இந்த விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்'' என தமது தோழர்களைப் பார்த்துக் கூறினார்கள்.


மறுமையில் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிந்து ஸஹீதானவர், அல்குர்ஆனைக் கற்றறிந்து பிறருக்கும் கற்றுக் கொடுத்த அறிஞர் மற்றும் இறைபாதையில் அதிகம் செலவு செய்த கொடை வள்ளல் ஆகிய மூவரும் விசாரணைக்காக அழைக்கப்படுவர்.

இவர்கள் அல்லாஹ்விடத்தில் தம்மை ஸஹீத், அறிஞர் மற்றும் கொடையாளி என அறிமுகம் செய்தாலும் இவர்களது உள்ளத்தை அறிந்திருந்தவன் அல்லாஹ் மாத்திரமே. எனவே, இவர்களிடம் ''நீங்கள் எதிர்பார்த்த புகழும் பெயரும் உலகில் கிடைத்து விட்டது இப்போது நீங்கள் நரகம் செல்லுங்கள்'' என கூறி அல்லாஹ் அவர்களை இழிவுபடுத்தி விடுவான். அல்லாஹ் இந்நிலையிலிருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டும்.

எனவே, எக்காரியமாக இருந்தாலும் 'அல்லாஹ்வுக்காக' என்ற எண்ணத்தில் மாத்திரமே செய்ய வேண்டும். பெற்றோரிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ளும் எண்ணத்தில் நல்லவர்களாக நடிப்பது மிகவும் பாரதூரமானது. ஆகையால், தூயவர்களாக வாழ்ந்து மறுமையிலும் அல்லாஹ்வை தூயவர்களாக சந்திக்க முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் - 14

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

# யூனுஸ் நபியின் திமிங்கிலம் 03

ஆமாம்! சுறாக்கள் அடிபட்டு சின்னா பின்னமாகி தலை தெறிக்க ஓடுவதை நான் கண்டேன்!

அந்தோ! என்னுடைய வாலில் ஒரு துண்டும் அவற்றின் பசிக்கு இரை யாகியது. இதனால் ''வாலில் துண்டில் லாத திமிங்கிலம்'' என்ற பட்டப்பெயர் எனக்கு நிலைத்து விட்டது! அன்று முதல் சுறாக்களை ஒரு கை பார்க்க வேண்டும் வைராக்கியம் என்னுள் ஏற்பட்டு விட்டது. நான் வளர்ந்தபோது சுறாக்களின் பல கூட்டங்களை தாக் கித் தவிடு பொடியாக்கியதனால் எனது பெயர் சுறாக்களிடையே மிக வும் பிரசித்தமானது. எனக்கு சிறு வயதில் ஏற்பட்ட பயம் என்னை விட்டும் விலகி நான் சுராக்களுக்கு பல இரவுகளும் பகல்களுமாக பயமூட்டும் திமிங்கிலமாக மாறிப் போனேன்.

''வாலுடைந்த வெள்ளை அம்பர் திமிங்கிலம் வருகின்றான்'' என்றுதான் மற்ற கடல்வாழ் ஜீவராசிகள் பயந்து ஒடுங்கிப் போய் என்னை விளம்பரப் படுத்துவார்கள். இதனால் நான் போகும் வழி ஒன்றும் இல்லாத சூன்யமாகத் தோன்றும்.

எனது பால்குடி காலம் முடி வடைந்தபோது எனது தந்தை எங்களைத் தேடி வந்தார். ''எனது வாலைச் சுட்டிக்காட்டி என்ன நடந்தது?'' என்று தாயை விசாரித்தார்.


தாய் என்னைப் பற்றி தந்தையிடம் எல்லா விபரங்களையும் கூறினார்.

''தந்தையைப் போல மகன் அல்லவா? நான் அவனைத் தனியே உலவ விட்டேன். அப்போது சுறாக்களின் கூட்ட மொன்று அவனைத் தாக்கத் தொடங்கின.''


''பயங்கரம்!... பிள்ளை எப்படி அவர்களை சமாளித்தான்?'' என தந்தை தாயிடம் வினவினார்.

''எல்லா மூர்க்க விலங்குகளின் குட்டிகள் போலவே இவனும் செயற்பட்டான்'' தாய் எனது முகத்தைப் பார்த்து கொண்டே தந்தையிடம் சொன்னார்.

''அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்'' வாலைச் சுழற்றிய வண்ணம் என்னைத் திரும்பிப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''வா என்னுடன். உனது பால்ய பருவம் கடந்து விட்டது. நாளை முதல் வகுப்பு ஆரம்பிக்கின்றது.''

நான் ஒரு மூர்க்கமான விலங்கைப் போல எதிர்த் தாக்குதல் நடத்தி சுறாக்களை விரட்டி அடித்ததாக தந்தை நினைத்துக் கொண்டார். அவ்வாறு எண்ணிக் கொள்ள வேண்டும் என்பதுதான் தாயின் எதிர்பார்ப் பாக இருந்தது. பயந்து அலறி தாயை உதவிக்கு அழைத்து தாயின் உதவியுடன்தான் தப்பினேன் என்பதை தந்திரமாக தந்தையிடம் மறைத்த தாயின் உத்திதான் என்ன? வேறோரு சந்தர்ப்பத்தில் தாய் என்னிடம் சொன்னார். அவ்வாறு பயந்துபோய் கதறியதை தந்தை அறிந்தால் கோபத்தில் என்னைத் தன் வாலினால் அடித்தே கொன்றிருப்பாராம்!

தந்தையின் ஏனைய மனைவிமார்களுக்குப் பிறந்த மூன்று குட்டிகளை தந்தை அடித்தே கொன்றிருப்பதையும் தாய் என்னிடம் எடுத்துச் சொன்னார்.

தோற்று கோழையாக வாழ்வதை விடவும் யாருக் கும் தெரியாமல் இறந்துபோவது மேல் என்பது தந்தையின் கொள்கையாக இருந்தது.

தந்தையை விட நான் தாயை அதிகம் நேசித்தேன். இது ஆறு மாதம் நீண்டிருந்தது. இந்த முலைக்குடி காலம் முழுவதும் நான் தாயுடன்தான் இருந்தேன். பின்னர் இரண்டு வருட காலம் நான் எனது தந்தை யுடன் இருந்தேன். அது எனது பாடசாலைக் காலமாக இருந்தது. நான் தந்தையை நேசிக்கத் தொடங்கினேன். தாயுடனான நேசம் கடலில் மூழ்கிப் போய்விட்டது.

பின்னர் நான் அதிகமாக தந்தையை நேசித் தாலும் அதுவும் கடல் நுரைகளில் கரைந்து விட்டது. என்னோடு முட்டுவதற்கு துணிந்த ஒருவரையும் நான் அதன் பிறகு காணவில்லை! அத்துடன் எனக்கு முன்பு நீந்திச் செல்வதற்கு கூட யாரும் துணிய மாட்டார்கள். எனது பெயரைக் கேட்டாலே ஈரல் குலை நடுங்காத எந்த மிருகமும் கடலில் இருக்கவில்லை. என்னைக் காணும் எவரும் இடறி விழ வேண்டும். அவ்வாறு யாராவது நிமிர்ந்து நிற்பாரேயானால், அதுவொன்றே அவனை நான் தண்டிப்பதற்குப் போதுமான காரணமாகி விடும். எனது கோபம் தலைக்கு மேல் உயருகின்றது. வாலைச் சுழற்றி அடிக்க ஆரம்பிப்பேன். அவன் தவிடுபொடியாகிப் போவான். வாயைத் திறந்து அவனை அப்படியே விழுங்கி கபளீகரம் செய்வேன். அவனது கதை அத்துடன் முடியும்.

என்ன நடந்தது என்று எதிரிக்குத் தெரியும் முன்பே மூன்று விடயங்கள் இடம் பெறலாம். ஒன்று நான் எனது அகலமானதும் பயங்கரமானது மான வாயைப் பிளந்து கொண்டு நடமாடுவது. இரண்டு எனது வயிற்றில் உயிருடனே அவன் சென்றடைவது. எனது வயிற்றில் கொஞ்சம் கொஞ்சமாக மரணித்து போகுமாறு நான் அவனிடம் கூறுவேன். மூன்றாவதாக நீரின் மேல் புறத்துக்கு நான் வந்து அல்லாஹ்வைப் புகழ்ந்து துதி செய்வேன்.

பாடசாலையில் எங்களது பாலர் பாடமே வாலினை எப்படி சுழற்றி அடிப்பது என்பதைப் பற்றியதாகும். இது இயல்பானதே.

விசாலமான வடக்கு சமுத்திரங்களில்தான் எங்கள் பாடசாலை இருந்தது. மலைகள் போன்ற அலைகள் எங்களது பாடங்களுக்கு சான்று பகரும்.

எங்களது வகுப்பில் ஆறு திமிங்கில குமாரர்கள் இருந்தார்கள். அனைவருக்கும் வித்தை படிப்பிற் கும் ஆசிரியராக எனது தந்தை இருந்தார். கடும் தீவிரமான கண்டிப்பான ஆசிரியர். தப்பாக பாடத்தை கற்றால் வாலினால் இலேசான அடி. இராத்திரி முழுதும் அதன் வேதனையால் தூக்கம் வராது! வயிற்றில் தலையில் அல்லது பக்கவாட்டில் எந்த இடத்தில் அடி விழுந்தாலும் ஒரு பெரிய பாறாங்கல் விழுந்த அனுபவம் போல தோன்றும்.

**(இன்ஷா அல்லாஹ் தொடரும்...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# இலங்கை முஸ்லிம் சமூகத்தின் பயிற்றப்பட்ட முதல் ஆசான் ரி.எஸ். அப்துல் லத்தீப்

வ. முஹம்மத் நபீல்

நாளைய நாளுக்கு அத்திவாரமாய் அமையும் இரு தொழில்களாக ஆசிரிய பணியையும் விவசாயத்தையும் குறிப் பிடலாம். இலங்கையின் ஆசிரிய சேவையில் கணிசமான தொகையினர் இன்னும் ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக ரி.எஸ். அப்துல் லத்தீப் அவர்களை குறிப்பிடலாம். இலங்கை யின் முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியராக மாத்திரமின்றி எழுத்து துறையிலும் சமூக சேவை பணிகளிலும் அவர் அதிகமாகவே சாதித்துள்ளார்.



**குடும்பமும் ஆரம்ப கல்வியும்**

1900ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் திகதி பிறந்த அப்துல் லத்தீப் அவர்களின் தந்தை தம்பி சாஹிப் மத்தியச்சம். தாயார் அலிமா உம்மா. 1910 ஆம் ஆண்டிலிருந்து தனது கல்வியை வெலிகாமம் முஸ்லிம் வித்தியால யத்தில் கற்ற அவர் தனது ஏனைய திறமை களையும் வளர்த்துக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டினார்.

**ஆசிரியராக...**

முஸ்லிம்கள் பெரிதாக கல்வியின் மீது அக்கறை காட்டாத காலப் பகுதி அது. அனைவரும் வியாபார மோகத்திலும் விவசாய காணிகளிலும் மூழ்கி இருந்தனர். அப்போது ஆசிரிய பணியை உன்னதமாக நேசித்த அவர் 1921ஆம் ஆண்டு தான் கற்ற அதே பாடசாலையில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டார். இரு வருடங்களின் பின் 1923ஆம் ஆண்டு கோப்பாய் அரசினர் பயிற்சி கலாசாலைக்குச் சென்று 'இலங்கை யின் முதல் பயிற்றப்பட்ட முஸ்லிம் ஆசிரியர்' என்ற பெயரையும் பதித்துக் கொண்டார்.

**தமிழ் மீது நீங்கா காதல்...**

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கற்கின்ற காலத்தில் தமது கல்விசார் படிப்பில் மாத்திரம் சுருங்கிக் கொள் ளாது தமிழறிவிலும் தமது அதீத அக்கறையையும் திறமையையும் காட்டினார். தமிழில் அவர் புரிந்த சாதனைகளின் காரணமாக 'தமிழிற் சூரியன்' என்ற பெயர் அவருக்கு வழங்கப்பட்டது.

**அவரின் பணிகளை பின்வருமாறு சுட்டிக்காட்டலாம்:**

1. 1925 -முதல் முஸ்லிம் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளி வருதல், காலி மல்ஹருஷ் சுல்ஹியா பாடசாலையில் தனது கடமைகளை ஆரம்பித்தல்
2. 1928 - மாத்தறை முஸ்லிம் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராக பணி புரிதல்
3. 1935 - வெலிகாமம் முஸ்லிம் வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராக 11 வருடங்கள் பணி புரிதல்
4. 1946 திக்குவல்லை பாடசாலையில் பணி
5. 1948 களுத்துறையில் பணி புரிதல்.
6. 01.05.1958 இல் ஓய்வு பெறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

வெறும் கற்பித்தலுடன் மாத்திரம் தனது பணிகளை சுருக்கிக் கொள்ளாது மாணவர்களின் ஆற்றல்களையும் ஆரோக்கியமான மனப்பாங்குகளையும் வளர்ப்பதில் அரும்பாடு பட்டார்.

- ஆசிரிய பணி புரிந்த காலத்தில் அவரது முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட ஜம்இய்யதுல் இஸ்லாமியத்துல் கைரியா சங்கம் சமூகத்திற்கு அடிப்டையான பல பணிகளை திறம்பட நடத்தியது. பள்ளிவாயல் ஒன்றை நிர்மாணித்ததுடன் மக்களை மார்க்கத்தின் பால் விழிப்பூட்டுவதில் தன்னால் முடிந்த அத்தனை நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்தது.
- 1936ஆம் ஆண்டு அவரது முதல் நூலான நபிகள் நாதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உலக இரட்சக தூதர் என்ற நூல் வெளிவந்தது.
- 30 அத்தியாயங்களையும் 310 பக்கங்களையும் கொண்டு 1971இல் வெளிவந்த 'திருக்குர்ஆனும் இயற்கையும்' என்ற நூல் அவரின் ஆய்வுத் திறனையும் ஆழ்ந்த மொழிப்புலமையையும் காட்டுகின்றது. சிங்கள நண்பர் ஒருவரின் இஸ்லாம் பற்றிய அறியாமையை கண்டு அவர் ஆதங்கப்பட்டதின் விளையே இந்த நூலாகும்.

உங்களுக்கும் ஆசிரியர் என்ற அற்புத பணி இலக்காக இருக்கும் என்றால் அப்துல் லத்தீப் ஆசிரியர் மிகப் பெரும் முன்னுதாரணமாகும். ஒவ்வொரு மாணவருக்குள்ளும் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களின் பலவீனங்களை களைந்து அவர்களுக்கு சிந்தனைச் சிறகுகளை பரிசளிக்கும் அற்புத பணியை நாம் செய்ய கிடைக்கும் சந்தர்ப்பம் மிகப் பெரும் வரமாகும்.

ஆசிரியர்களே இந்த உலகை வடிவமைக்கின்றார்கள். நாளை இந்த உலகம் எந்த திசையில் பயணிக்க வேண்டும் என்பதனை திட்டமிடுகின்றார்கள். தம்மிடம் கற்க வரும் ஒவ்வொரு மாணவரையும் தமது தோள்களில் ஏற்றி அகன்ற பிரபஞ்சத்தினை சுற்றிக் காட்டுகின்றார்கள். அதனை ஜெயிக்கும் கலைகளை கற்றுத் தருகின்றார்கள். அதனால்தான் ஆசிரியம் என்பது தொழிலல்ல..., சேவையும் அல்ல... அதனையும் கடந்த அற்புதமான அரியாசனம் என ஆசிரியர்கள் புகழப்படுகின்றார்கள்.

ஓய்வு பெற்ற பின்னரும் தனது பொழுதுகளை எழுத்துத் துறையிலும் சமூக மேம்பாட்டு விடயங்களிலும் செலவிட்ட அவர் 10.03.1977அன்று தனது ஏகனிடம் மீண்டார்.



**சிந்தனைக் கதை**

# பள்ளத்தில் தவளைகள்

ஒரு தவளைக் கூட்டம் காட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் சென்று கொண்டிருந்தது. அப்போது இரு தவளைகள் ஓர் ஆழமான பள்ளத்தில் தவறி விழுந்து விட்டன.

இரு தவளைகளும் தங்களால் இயன்ற அளவு வேகமாக தாவி வெளியே வர முயற்சி செய்தன. ஆனால், பள்ளம் ஆழமாக இருந்ததால் வெளியே வரமுடியவில்லை. இரண்டும் தொடர்ந்து முயற்சி செய்தன.

மற்ற தவளைகள் பள்ளத்தைச் சுற்றி நின்று மேலேயிருந்து வேடிக்கை பார்த்தன. அவை அந்த இரு தவளைகளைப் பார்த்து ''வீணாக குதித்து தங்களை வருத்திச் சாக வேண்டாம்'' என்று கூறின. ''எப்படியும் வெளியே வர முடியாது. எதற்கு உடலை வருத்திச் சாக வேண்டும். அதனால் அமைதியாக இருங்கள்'' என்று அந்தத் தவளைகளைப் பார்த்து கத்தின. குதிக்க வேண்டாம் என்று கையை ஆட்டி சைகை செய்தன.

இவர்களது பேச்சைக் கேட்ட ஒரு தவளை குதிப்பதை நிறுத்தி விட்டு, ஓர் ஓரமாக அமர்ந்து விட்டது. ஆனால், மற்றொரு தவளை முன்பைவிட வேகமாக குதித்தது. மேலேயிருந்து தவளைகளெல்லாம் இன்னும் அதிகமாகக் கத்தின, ''வீணாக சீக்கிரம் உயிரை விடாதே. குதிப்பதை நிறுத்து!'' என்றுக் கத்தின.

இன்னும் வேகமாகக் குதித்த அந்தத் தவளை ஒரு மிகப் பெரிய பாய்ச்சலில் வெளியே வந்து விட்டது. எல்லா தவளைகளுக்கும் ஆச்சரியம் தாளவில்லை.

அந்தத் தவளையை சுற்றிக்கொண்டு, ''நாங்களெல்லாம் குதிக்காதே என்று சொன்ன பிறகும் எப்படி குதித்து வெளியே வந்தாய்?'' என்று கேட்டன.

உண்மை என்னவெனில், அந்தத் தவளைக்குக் காது கேட்காது. மற்ற தவளைகள் சுற்றி நின்று குதிக்க வேண்டாம் என்று தடுத்ததை, எல்லோரும் தன்னை குதிக்கச் சொல்லி உற்சாகப்படுத்துவதாக தவறாக நினைத்து விட்டது. அதனால்தான் அந்தத் தவளையால் இப்படி சாதிக்க முடிந்தது.

மற்றவர்களின் தளர்வடையச் செய்யும் வார்த்தைகளுக்கு செவிசாய்க்காதவர்களே வெற்றியடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உலகிற்கு முஸ்லிம்கள் அறிமுகம் செய்த சில கண்டுபிடிப்புகள்

1. குருதிச் சுற்றோட்டத்தைப் பற்றி முதன் முதலில் விளக்கியவர்? இப்னு நபீஸ்
2. உணவின் சமிபாடு வாயிலிருந்து ஆரம்பிக்கிறது என்பதை முதன் முதலில் விளக்கியவர்? அலி இப்னு ஸீனா
3. கண் விழித்திரை செயற்பாடு குறித்து முதன் முதலில் விளக்கியவர்? இப்னு ருஷ்த்
4. அம்மை நோய் தடுப்பு முறையை முதன் முதலில் கண்டு பிடித்தவர்? முஹம்மத் இப்னு அர்ராஸி
5. மிருகக் கருவிலிருந்து அமோனியா தயாரிக்கும் முறையை முதன் முதலில் விளக்கியவர்? ஸகரிய்யா அர்ராஸி
6. காதின் உற்பத்தியில் மருத்துவப் பரிசோதனைகளைச் செய்யும் கருவியைக் கண்டுபிடித்தவர்? அபூ அல்காஸிம் அஸ்ஸஹ்ராலி

**அல்ஹாபிழ் எம். பயாஸ்**
**அந்நஹ்ஜதுல் இஸ்லாமிய்யாஹ் அ.க.**
**வாழைச்சேனை - 05**

# பேச்சின் சிறப்பு



கோபமாய் பேசினால் குணத்தை இழப்பாய்!
வேகமாய் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்!
வெட்டியாய் பேசினால் வேலையை இழப்பாய்!
அதிகமாய் பேசினால் அமைதியை இழப்பாய்!
ஆணவமாய் பேசினால் அன்பை இழப்பாய்!
சிந்தித்து பேசினால் சிறப்போடு வாழ்வாய்!!!

**ஏ. அஸ்மா**
**அ/கல்லாஞ்சியகம, காகம ம.வி.**

# பொது அறிவு



- உலக உணவு ஸ்தாபனம் எது எங்குள்ளது? FAO/ரோம்
- சிறந்த புத்தகங்களுக்கான தரச்சான்று இலச்சினை யாது? ISBN
- இலங்கையில் முதல் அமைக்கப்பட்ட தொலைக்காட்டி சேவை எது? சுயாதீன தொலைக்காட்டி சேவை (ITN)
- இரசாயனவியலின் தந்தை யார்? ராபர்ட் பாயில்
- கல்சியம் காபனேற்றின் இரசாயன சூத்திரம் - $CaCO_3$
- கணையாழி என்ற சொல்லின் ஒத்த சொல் - மோதிரம்
- நுண்ணுயிர்க் கொல்லியான பெனிசிலின் ஐ கண்டுபிடித்தவர்? அலெக்சாண்டர் பிளெமிங்

**எம்.என்.எப். நதா**
**மட்/மீராவோடை அல் ஹிதாயா ம.வி.**



# ஐந்து

1. ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி
2. ஐம்பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
3. ஐம்புலன்கள் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
4. ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல்
5. ஐம்பால் - ஆண் பால், பெண் பால், பலர்பால், பலவின் பால், ஒன்றன் பால்
6. ஐம்பெருங்காப்பியம் - சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி
7. ஐந்திலக்கணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
8. ஐங்குரவர் - அரசன், ஆசிரியர், அன்னை, தந்தை, தமையன்

**எம்.என்.எப். நிதா**
**கெகுணகொல்ல தே.பா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அறிந்ததும் அறியாததும்...

- ✓ மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான முக்கிய தகவல்களை முன்வைத்தவர் - வில்லியம் ஹாவே
- ✓ முதன் முதலில் நோய் ஏற்படுவதற்கான காரணங்களையும் அதற்கான தீர்வையும் கண்டறிந்தவர் - பெரசல்சஸ்
- ✓ அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தவர் - ஜொஹன்னஸ் கூடன்பெக்
- ✓ புவியீர்ப்பு விசையை கண்டுபிடித்தவர் - ஐசக் நியூட்டன்
- ✓ அங்கிகள் தொடர்பான விஞ்ஞான ரீதியான வெற்றிகரமான பாகுபாட்டை முன்வைத்தவர் - கரோலஸ் லீனியஸ்
- ✓ முதன் முதலில் அங்கிகளை இராச்சியங்களாக பிரித்தவர் - ரொபட் விக்டேகர்
- ✓ முதன் முதலில் வைரஸ் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர் - டீ.ஜே. ஐவனொஸ்கி
- ✓ மிருகங்களை கொல்லக்கூடாது என சட்டமியற்றியவர் - ஆமண்ட காமினி

✍ ஜே.எப். ரிப்னா
பாத்திமா ஸஹ்றா பெ.அ.க.
ஓட்டமாவடி



# தாயகம் சில...

| | |
|---|---|
| கோதுமையின் தாயகம் | - இத்தாலி |
| வெற்றிலையின் தாயகம் | - மலேசியா |
| வெங்காயத்தின் தாயகம் | - எகிப்து |
| உருளைக் கிழங்கின் தாயகம் | - பெரு |
| வாழையின் தாயகம் | - இந்தியா |
| முந்திரிகையின் தாயகம் | - பிரேசில் |
| சூரியகாந்தியின் தாயகம் | - வட அமெரிக்கா |

✍ தௌபீக் யூசீப் அன்பல்
மூதூர் 05

# சாதனையாளர்களின் சிந்தனைகள் சில...

- ❍ "உன் எதிரியுடன் சமாதானமாக விரும்பினால், அவனுடன் இணைந்து செயற்படு, நிச்சயம் அவன் உன் துணை நிற்பான்." நெல்சன் மண்டேலா
- ❍ "உங்களால் பறக்க முடியாவிட்டால் ஓடுங்கள். ஓட முடியாவிட்டால் நடந்து செல்லுங்கள். நடக்கவும் முடியாவிட்டால் தவழுங்கள்... இலக்குகளை நோக்கி சென்று கொண்டிருக்கிறீர் என்பதே முக்கியம்!" அடோல்ப் ஹிட்லர்

✍ எப். மப்ஸா மௌஜீத்
ஸஹ்றா வளாகம்,
ஓட்டமாவடி

சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

# இதோ உங்களுக்கு நினைவூட்ட 7 விடயங்கள்

1. உங்கள் அல்குர்ஆன், தர்ஜுமா போன்றவற்றை ஓதாமல் தூசு படியும்போது...
2. மற்றவர்களுக்கு ஸலாம் சொல்ல வெட்கப்படும் போது...
3. உலகில் முஸ்லிம்கள் கொல்லப்படுவது உங்கள் உள்ளத்தில் தாக்கம் செலுத்தவில்லையாயின்...
4. எதிர்ப்பாலினர் உங்களைப் பார்த்து ரசிக்கும் போது நீங்கள் சந்தோஷப்படுவது...
5. ரமழானில் அதிகப் பகுதியை தொலைக்காட்சியோடு மட்டுமில்லாமல் இன்டர்நெட்டோடு காலத்தை கழிக்கும்போது...
6. அல்லாஹ் பார்க்கிறான் என்ற உணர்வு இல்லாமல் போகும்போது...
7. உங்கள் நண்பர்களுடன் உரையாடும்போது எதிர்ப்பாலினர் பற்றியதாகவும் திரைப்படங்களில் வரும் நடிகர், நடிகைகள் பற்றியதாகும் போது...

உங்கள் மனதிலிருந்து இஸ்லாம் வெளியேறத் தொடங்குகிறது.

✍ அப்ரத் அம்னா
பளளுவெவ, பலாகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com

# பேசும் பறவை மைனா

நாமனைவரும் அறிந்த, எமக்குப் பரிச்சயமான பறவைதான் மைனா. எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் மைனாக்களின் சப்தங்களைக் கேட்கலாம். அவ்வளவு பிரபலமானவை. இவை ஸ்டார்லிங் எனும் பறவைக் குடும்பத்தைச் சேர்ந்தவை. கிழக்காசிய நாடுகள்தான் அதுவும் இந்தியா, இலங்கை நாடுகள்தான் இவற்றின் தாய் பூமி. ஒரு காலத்தில் இங்கிருந்து அமெரிக்க நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டன. தமிழ், சிங்களம், ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி போன்ற அனைத்து மொழிகளிலும் இது மைனா - **Myna** என்றே அழைக்கப்படுகின்றது. இதன் சரியான தமிழ்ப் பெயர் 'நாகணவாய்ப்புள்' என்பதாகும். இலக்கியங்களில் 'சிறுபூவாய்' என அழைக்கப்படுகிறது. சிறுவர் இலக்கியப் பாடல்களிலும் காதல் பாடல்களிலும் கூட மைனாக்கள் இடம் பிடித்திருப்பது இவற்றின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

## புறத்தோற்றம்

இலங்கை வாழ் மைனாக்கள் அனைத்துமே பொதுவாக உச்சந் தலை முதல் கழுத்துப் பகுதிவரை கருமையாகவும் உடற் பகுதி பழுப்பு கலந்த மண் நிறத்திலும் காணப்படும். அவற்றின் அலகும் கண்களின் ஓரங்களும் கால்களும் மஞ்சள் நிறம் கொண்டது. அலகிலிருந்து ஆரம்பிக்கும் மஞ்சள் நிறம் அப்படியே நீண்டுவந்து கண்களையும் சுற்றிப் படர்ந்திருக்கும். வாலுக்கும் சிறகுக்கும் அடியில் வெண்மையாக இருக்கும். இந்த மஞ்சள் நிற அலங்காரம்தான் மைனாக்களின் தோற்றத்தை மெருகேற்றுகின்றன. அத்தோடு வாலிலும் சிறகிலும் இருக்கும் வெண்மையான பகுதிகள் மைனாக்கள் பறக்கும்போது அழகிய தோற்றத்தைத் தரும். உறுதியான கால்களையும் வலுவான சிறகுகளையும் இவை கொண்டுள்ளன. வளர்ந்த மைனா ஒன்று 25 சென்ரிமீற்றர் நீளம் கொண்டிருக்கும். புறத்தோற்றத்தை வைத்துப் பார்க்கும்போது மைனாக்களில் ஏழு வகை இனங்கள் இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். அதில் பிரபலமானவை நம் நாட்டு மைனாக்கள்தான்.

## வாழிடங்கள்

மைனாக்கள் பொந்துகளிலேயே தங்களின் கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. ஏனைய பறவைகள் போன்று மரக் கிளைகளில் கூடுகட்ட அவற்றுக்குத் தெரியாது. பனை, தென்னை மரப்பொந்துகள், கட்டிடச் சுவர்களில் உள்ள துளைகள், பாறை இடுக்குகள், செங்குத்தான மண் மேடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ள பொந்துகள் ஆகியவற்றில் கூடு கட்டும். பழைய காகிதத் தாள், வைக்கோல், துணி ஆகிய வற்றை பொந்துக்குள் கொண்டு சென்று மெத்தை போன்று அமைத்து அதில் முட்டையிட்டு அடை காக்கும்.

## வாழ்க்கை அமைப்பு

மைனாக்கள் கூட்டமாக வாழும் இயல்பு படைத் தவை. காலையில் கூட்டமாக மரங்களிலிருந்து வெளியேறி மாலையிலும் கூட்டமாகவே கூடு வந்து சேரும். உணவுண்பதும் மரக்கிளைகளில் ஓய்வெடுப்பதும் நீர்த் தேக்கங்களில் குளிப்பதும் கூட்டமாகத்தான். விடியற் பொழுதிலும் சூரியன் அஸ்தமிக்கும் நேரத்திலும் இவை கூட்டமாக மரங்களில் கூடி கீச் கீச் என்று சப்தமெழுப்பிக் கொண்டே இருக்கும். சிலபோது இந்த இரைச்சல் சப்தம் காதுகளுக்குப் பெரும் தொந்தரவாக இருக்கும்.

சுமார் இருபது அங்கத்தவர்கள் வரை உள்ளடக் கிய கூட்டமாக வாழும் மைனாக்கள் இனப்பெருக்க காலத்தில் ஜோடி சேர்ந்து மற்ற மைனாக்களிலிருந்து ஒதுங்கி இருக்கும். இரண்டும் சேர்ந்து தமக்கான கூட்டைத் தெரிவு செய்து கொள்ளும். பின்னர் அதில் முட்டையிட்டு அடைகாக்கும். பெண் பறவை அடைகாக்க ஆண் பறவை துணையாயிருக்கும். எந்தவொரு பறவையையும் கூட்டை அண்ட விடாது. காகங்களையும் பாம்புகளையும் மூர்க்கமாகத் தாக்கித் துரத்தி விடும். அப்படியான வலிமை மிக்கத் துணிவு இவற்றுக்கு உண்டு. குஞ்சு பிறந் ததும் இரண்டு பறவைகளும் சேர்ந்து குஞ்சுகளுக்கு உணவு ஊட்டும். மைனாக்கள் புழுக்கள், பூச்சிகள், பழங்கள், சிறு தானிய மணிகள் தேன் என எல்லா வற்றையும் உண்பதால் இவை அனைத்துண்ணி வகையிலும் சேர்க்கப்படுகின்றன. பூச்சி புழுக்களை விரும்பி உண்பதால் இது விவசாயியின் தோழன்!

## குஞ்சு மைனாக்கள்

குஞ்சு மைனாக்கள் சுயமாகப் பறக்கும் காலத்தை அடையும் வரையில் அவை கூட்டுக்குள்ளேயே இருக்கும். பெற்றோரின் பராமரிப்பு அவற்றுக்கு மிக அவசியம். பறக்கும் வலிமையைப் பெற்று விட்டால் அதனை ஒரு விழாவாகவே எல்லா மைனாக்களும் சேர்ந்து கொண்டாடும். சிலபோது உங்கள் வீட்டுச் சூழலில் நீங்களும் இதனைப் பார்த்திருப்பீர்கள். குஞ்சு மைனாக்கள் தாமாக கூட்டுக்குள் இருந்து வெளியேறிப் பறக்க வேண் டும். அப்படி இல்லா விட்டால் பெற்றோர் ஒவ் வொரு குஞ்சையும் எடுத்து வெளியே போட்டு விடும். அப்போது சுற்றியுள்ள மற்ற மைனாக்கள் எல்லாம் சப்தம் போட்டு ஆரவாரம் செய்து குஞ்சு மைனாக்களைப் பறக்க உற்சாகமூட்டும். இது பார்க்க ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

## மனிதர்களுடனான சகவாசம்

புறா, காகம் , சிட்டுக்குருவி போல மைனாக் களும் மனிதர்கள் வாழும் பகுதிகளில், ஓரளவு திறந்த வெளியை அண்டித்தான் அதிகம் வாழ ஆசைப்படுகின்றன. காரணம் அப்போதுதான் அவற்றுக்கு இலகுவாக உணவும் பாதுகாப்பும் கிடைக்கும். நன்கு பறந்து திரிய முடியுமாக இருந்தாலும் எல்லாத் திசையிலும் இவை சுற்றித் திரிவதில்லை. தாம் பிறந்த இடத்திலிருந்து ஓிரண்டு கிலோ மீற்றர் தூரத்தைச் சுற்றித்தான் இவை பரந்து திரியும். அந்தப் பரப்புக்குள் இருக்கும் வீட்டு முற்றங்களுக்கும் கொல்லைப் புறங்களுக்கும் இவை அடிக்கடி வந்து செல்லும். எனவே, வீட்டு அங்கத்தவர்களை இவற்றால் நன்றாக அடையாளம் கண்டு ஞாபகம் வைத்துக் கொள்ளவும் முடிகின்ற தாம். இவற்றுக்கு நாம் உணவும் நீரும் கொடுத்து அன்பாக நடந்து கொண்டால் நம்பிக்கையோடு எம் பக்கத்திலும் வந்து உலாவுகின்றன. உங்கள் வீட்டின் பின் புறத்தில் கட்டையொன்றின் மீது எஞ்சுகின்ற உணவுகளையும் ஒரு பாத்திரத்தில் நீரையும் வைத்து வாருங்கள். உங்களுடனும் மைனாக்கள் நேசம் கொள்வதைக் காணலாம்.

## பேசும் பறவை

மைனாக்கள் கிளிகளைப் போன்று நாம் கற்றுக் கொடுப்பவற்றை அப்படியே ஞாபகத்தில் வைத்து மீண்டும் பேசும் திறன் படைத்தவை. அப்படியான imitative skills இவற்றிடம் காணப்படுகின்றது. எனவே, இவற்றை பேசும் பறவைகள் வரிசையி லும் உள்ளடக்குவர். இதற்காகவே பலரும் மைனாக் களை செல்லப் பிராணியாக வீடுகளில் வளர்ப்ப துண்டு. (எனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கு அவர்கள் வளர்க்கும் மைனா அழகான முறையில் தெளிவாகப் பேசு வதை அவதானித்தேன். வீட்டு முற்றத்தில் இருக்கும் கூட்டிலிருந்து அந்த மைனா ஸலாம் சொல்வதும் நண்பரின் பெயரைக் கூறி அழைப்பதும் விசில் அடிப்பதும் பூனை போன்று சப்தமிடுவதுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டகாசம் செய்தது அந்த மைனா. பார்க்க வியப் பாகவும் ஆசையாகவும் இருந்தது. உங்களுக்கும் இதுபோன்ற அனுபவம் இருக்கும்.) மனித ஒலி களுடன் வீட்டு விலங்குகளின் குரல்களையும் அப்படியே திரும்பச் சொல்லும் ஆற்றல் இவற் றுக்கு உண்டு.

மைனாக்கள் தமக்குள் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கு பல வித்தியாசமான சப்தங்களை வெளிப்படுத்துகின்றன. பலபோது சூழலின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கணீரென்ற குரலில் மைனாக்கள் பாடத் துவங்கும். மைனாக்கள் தங்களுக்குள் மூன்று முதல் பதின்மூன்று வகை யான இசை வடிவங்களில் பேசிக் கொள்ளுமாம். மனிதக் குரலை உலகிலேயே மிக நெருக்கமாகத் திருப்பித் தரவல்ல பறவை என்ற பட்டத்தினை யும் கூண்டிலடைத்து வைத்தாலும் சற்றும் மனம் தளராத பறவை என்ற பாராட்டையும் பெற்றுக் கொள்வது இந்த மைனாக்கள்தான்.

### மைனாக்களால் அவுஸ்ரேலியாவுக்கு ஆபத்தாம்

1862 ஆம் ஆண்டுகளில் மைனாக்களை அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு அறிமுகப்படுத்தியுள்ளார்கள். நோக்கம் ஆரம் பங்களில் வெற்றிகரமாக நடைபெற்றாலும் தற்போது வேறு வகையில் இது அந்நாட்டுக்கு தலையிடியாய் மாறியுள்ளதாம். மைனாக்களின் எண்ணிக்கை அசுர வேகத்தில் வளர்ந்து அங்குள்ள தேசியப் பறவையினங்களையெல்லாம் ஒடுக்கி விட்டு, குறுகிய காலத்தில் பன்மடங்கு பெருகி ஆக்கிரமிப்பு நடத்தும் அழிவு சக்திகளில் மிக முக்கிய இடத்தை மைனாக்கள் பெற்றிருக்கின்றன. மரப்பொந்துகளை ஆக்கிரமித்து மண்ணின் சொந் தப் பறவைகளையும் விரட்டியடித்து அக்கிரமம் செய்கின்றனவாம். ஒரு மைனாவுக்கு முட்டையிட் டுக் குஞ்சு பொரிக்க ஒரு பொந்து மட்டுமே தேவை என்றபோதும் சுற்றுப்புறத்தில் உள்ள மற்றப் பொந்துகளையும் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. பின்னர் குப்பை கூளங்களைக் கொண்டு அப் பொந்துகளை அடைத்து விடுகின்றனவாம். இவ்வளவும் போதாதென்று மரக்கிளைகளில் கூடு கட்டியிருக்கும் பறவைகளின் குஞ்சுகளையும் கீழே தள்ளிக் கொல்லுகின்றன என்று **International Union for Conservation of Nature (IUCN)** நிறுவனம் குறிப்பிடுகின்றது.

இப்படி மைனாக்களின் புத்திசாலித்தனத்துக் கும் மூர்க்கத்தனத்துக்கும் ஈடுகொடுக்க முடியா மல் மண்ணின் சொந்தப் பறவைகள் கொஞ்சம் கொஞ்சமாய் தங்கள் இருப்பிடங்களை இவற்றுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டு விட்டன. உலகிலுள்ள மிக மோசமான ஆக்கிர மிப்பு இனங்களில் முதல் நூறிடத்தில் இந்த மைனாவும் வருவதாக **IUCN** வின் ஆய்வுகள் கூறு கின்றன. அவுஸ்திரேலியாவின் தலைநகரில் 1970 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மைனாக்களின் எண்ணிக்கை 110. ஆனால், 2006 ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி அங்கு அவற்றின் எண்ணிக்கை 93,000.

அவசரமாய் விழித்துக் கொண்ட சுற்றுச்சூழல் பாதுகாப்புத்துறை மைனாக்களின் எண்ணிக்கை யைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. 1300 க்கும் மேற்பட்டவர்கள் பொறிகளை அமைத்து மைனாக்களைப் பிடிக்கும் பணியில் அமர்த்தப்பட்டனர். ஆனால், ஆச்சரியம் அவற்றின் புத்திக் கூர்மையைப் பாருங்கள் இப்பறவைகளைப் பிடிக்கவோ கொல்லவோ வைக்கப்படும் பொறி களை மிகச் சரியாக அடையாளம் கண்டுகொண்டு தவிர்த்து தப்பித்து விடுகின்றனவாம். அப்படியே தவறிப்போய் ஒன்று இரண்டு சிக்கிக் கொண்டாலும் உடனடியாக மற்ற மைனாக்களை எச்சரித்து தப்பிக் கவைத்து விடுகின்றனவாம். மைனாக்களைப் பிடிக்க எந்த மாதிரி பொறி தயாரிப்பது? எப்படி பொறி வைப்பவர்களுக்குப் பயிற்சியளிப்பது என்று ஒரு பெரிய ஆராய்ச்சியே நடந்து கொண்டிருக்கிறது அவுஸ்திரேலியாவில். பார்த்தீர்களா... அப்பாவி போன்று இருந்து கொண்டு என்ன வேலை செய்கின்ற தென்று? ஒவ்வொரு படைப்பும் ஆச்சரியமான வைதான், சுப்ஹானல்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கோலா
# ANGOLA





குடியரசு தலைவர்
யோசே டோஸ்

உலகம் எவ்வளவு தூரம் விஞ்ஞான வளர்ச்சிகளை உள்வாங்கி நவீனமடைந்த போதும் உலகின் சில நாடுகள் இப்போதும் தமது மரபுகளையும் பாரம்பரியங்களையும் பாதுகாப்பதில் வெகு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஆபிரிக்காவின் அங்கோலா மரபுகளை பாதுகாக்க முனைப்புடன் செயற்படும் ஒரு நாடாகும்.

**அமைவிடம்**

ஆபிரிக்காவின் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் அங்கோலா நாட்டின் தென் எல்லையாக நமீபியாவும் வடக்கே கொங்கோ மக்களாட்சி குடியரசும் கிழக்கே சாம்பியாவும் மேற்கே அட்லாண்டிக் கடலும் உள்ளன.


**வளங்களும் கொள்ளைக்காரர்களும்**

ஆபிரிக்காவின் வளங்களை கொள்ளையடிக்க திட்டமிட்ட ஐரோப்பியர்களின் முக்கிய இலக்காக அங்கோலா இருந்தது. வைரம், நிலத்தடி எண்ணெய் போன்ற மிகப் பெரும் பொக்கிஷங்கள் அங்கோலாவை நோக்கி போர்த்துக்கேயரை இழுத்து வந்தன.

**திட்டமிடப்பட்ட நிர்வாகம்**

ஆபிரிக்க நாடுகளில் திட்டமிடப்பட்ட நிர்வாகம் முறையாக நடக்கும் நாடுகளில் அங்கோலா முக்கியமானது. 18 மாகாணங்களையும் 163 நகராட்சிகளையும் கொண்ட அமைப்பு அங்கு காணப்படுகின்றது.

| | |
|---|---|
| தலைநகரம் | - லுவான்டா |
| ஆட்சி மொழி | - போர்த்துகீசு |
| அரசு | - மக்களாட்சி |
| பிரதமர் | - வெர்னாண்டோ டா பியேடாடே |
| சுதந்திர தினம் | -11.11.1975 |
| பரப்பளவு | - 12 46 700கி.மீ2 |
| சனத்தொகை | - 25 789 024 |
| நாணயம் | - குவான்ஸா |





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu Alaikum
# my dear friends!!!

As a Muslim, what do you think is the biggest challenge that you face in this modern world? There may be numerous issues coming to your mind right now. However, what I feel is that, the biggest issue that each and every one of us irrespective of age and gender, facing today is the inability to control our desires. If I want to put it in other words, the difficulty in trying to avoid sins.


Especially as teenagers, you all must be facing this and find it hard to share it with anyone. The world is getting so corrupt day by day that no matter how hard we try strive to keep ourselves away from sins, we end up committing sins. Soon after committing the sin we keep blaming ourselves for being so impulsive.

You all must have already understood what I am trying to explain.

ADDICTION

This is a disease that has affected most of today. People today are addicted to various kinds of stuffs that they have forgotten the real purpose of life. By mentioning addiction I mean being passionate to something so much so that you are deeply in love with that particular aspect and forget about everything else. You tend to forget your parents, your siblings, your education, your religion, your prayers and even your own self.

### What are the kind of things that people get addicted to?




- Music
- Film
- Games
- Fast food
- Friends (boys and girls)
- Social media
- Drugs

If you are involved in anything so much that you forget to eat, drink, pray and sleep on time, this means you are addicted to that thing. Sometimes even good things can turn into addiction if they become obsession. For example, it is absolutely fine to spend some time in the social media. However, it is bad to be absorbed into social media the entire day that you ignore other important matters.

Addiction to something is very harmful for both the physical and mental health. In order to protect yourself from addiction, seek continuous guidance from Allah. If you are strong enough to stand against something that you love for the sake of Allah, Allah will replace it with something much better for you.

It is YOU who have to take the decision. Make Dua to Allah to raise your level of Thaqwa and protect you from the whispers of Satan. Make yourself mentally strong and try to shift your focus to something worthy of doing.

### Here are some tips and advices to control your desires

- Apart from establishing the obligatory prayers, perform the Sunnah Salaths.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Keep yourself busy in reciting the Quran, making Dua and doing Dhikr.
- Abstain from all sorts of haram things. Even if you feel like going towards it, divert your mind to something else.
- Surround yourself with good people. Never be alone. When you are left alone it is easy for Satan to make you commit sins
- Try to avoid the thing that makes you commit the sin. For example if you are person who constantly watch movies in the laptop, keep the laptop in a place where you cannot reach very often.
- Make good friends.
- Share your problems with your parents and seek their guidance.

## Hadith of the month

The messenger of Allah (pbuh) said "You will never leave something for the sake of Allah, but Allah will give you something better in return."

[Musnad]

## *Giggle* a bit:

**A 3 years old boy sits near a pregnant woman.**

**Boy:** Why do you look so fat?

**Pregnant woman:** I have a baby inside me.

**Boy:** Is it a good baby?

**Pregnant woman:** Yes, it is a very good baby.

**Boy:** Then why did you eat it?!



## Your Corner

# Dhul Qarnayn

(part 2)



It is popularly believed that Dhul-Qarnayn refers to Iskandar Dhul-Qarnayn or Alexander the Great of Macedonia. However, the historical details do not match, and further, Alexander the Great of Macedonia was not a believer in Islam whereas Dhul-Qarnayn was a pious believer. There are many theories of who this man was and in what era he lived. However, the precise identity of Dhul-Qarnayn is not described in the Qur'an and Hadith, and Allah did not provide us with the details for a wisdom that He knows. As with many other Qur'anic stories, Allah only reveals essential information to us, and if details are not revealed, then the knowledge of such details is inconsequential to our journey of iman and we should not enquire or debate any further about it.

What is known is that Dhul-Qarnayn was a man endowed by Allah with many talents and abilities, including military prowess, the ability to rule kingdoms, and extensive practical knowledge on many aspects of life. He was also a pious and steadfast Muslim who constantly contemplated over the signs of Allah and lived



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

his days travelling from one destination to the next in order to establish justice in the land and alleviate the suffering of the people.

Indeed We established him upon the earth, and We gave him to everything a way. So he followed a way. (Al Qur'an 18:84 – 18:85)

The Travels of Dhul-Qarnayn

Dhul-Qarnayn travelled extensively in his life. It is said that he ruled the earth from east to west, but it is noted that Allah only revealed part of this story to us. We therefore record what is revealed in the Qu'ran, and will not cite information which is not verified by authentic sources.

One of this travels brought him to the West, where he found the sun setting as if in a spring of dark mud. In this location he discovered a community who were living under oppressed conditions.

Until, when he reached the setting of the sun, he found it [as if] setting in a spring of dark mud, and he found near it a people. Allah said, "O Dhul-Qarnayn, either you punish [them] or else adopt among them [a way of] goodness." (Al Qur'an 18:86)

So Dhul-Qarnayn went into the community and led them to the correct path and ways of life in accordance with the rulings of the Almighty. He liberated the community from the oppression that they were subject to, inflicted punishment upon the oppressors, criminals and evildoers and aided the weak and oppressed until justice was established in the land.

**M.F.FAZAL AHAMED**
**ODDAMAVADI**

# Friends make our world more beautiful

Friends are the people who share joys and sorrows with us. There is an old saying that "A friend in need is a friend indeed." A true friend is always there to help us, guide us, take care of us and they stay beside us when we are in trouble. It is our responsibility to choose the correct friend. A true friend shows us the right path. They help us to correct our mistakes. True friends also look like beautiful roses. They give a beauty, a color and make our life a bright. Real friends never leave us alone when we are in a problem. It is easy to break up a friendship than to maintain it. False friends are worse than an



enemy. False friends never like when another person have a friend because, they do not have feelings. So, choose a good friend who helps you in all possible ways. True friendship can make our world with peace and harmony.

**Fathima Rizna Arifeen 9 E**
**Sujatha Vidyalaya, Nugegoda.**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

A 61/ 5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஜீனியஸ்?

C LIBRARY
JAFF

1. எமது உடலில் உள்ள நீரின் சதவீதம் எவ்வளவு?
2. மைனா எந்த பறவைக் குடும்பத்தைச் சேர்ந்தது?
3. 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி எந்நாட்டில் நடைபெற இருக்கிறது?
4. அங்கோலா நாட்டு நாணய அலகு எது?
5. 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி எந்நாட்டில் நடைபெற இருக்கிறது?
6. உலக தபால் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
7. உருழைக் கிழங்கின் தாயகம் எது?
8. மடிக்கணினி ஆங்கிலத்தில் எவ்வாறு அழைக்கப்படும்?
9. இலங்கையில் காணப்படும் தபால் நிலயங்கள் எத்தனை?
10. ஐந்திணைகளும் எவை?

**போட்டி இல: 12**



## போட்டியின் நிபந்தனைகள்

01. தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான புத்தக பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

02. சரியான விடையை தபால் அட்டையில் மாத்திரம் எழுத வேண்டும்.

03. விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**அகரம்**
No 77, Sri Vajiragnana mw
Colombo-09

04. போட்டி முடிவுத்திகதி 30.10.2018

## யார் ஜீனியஸ்? போட்டி இல- 10 முடிவுகள்

### பரிசுக்குரியவர்கள்

**எஸ்.எம். நிமாஸ்**
**தி/அன் நூரியா மு.ம.வி., குச்சவெளி**

**ஆர். ஆனீஷா அப்ரின்**
**கிரி/மெத்தேகெடிய மு.ம.வி., அளஹிடியாவ**

**எம்.ஏ. அஸ்மா**
**மா/ஆமீனா பெ.தே.பா., மாத்தளை**

### பாராட்டுக்குரியவர்கள்

எச். அப்ரா – அல் ஹிக்மா மு.ம.வி., தித்தவல்கால
ஆர். லிகா – நிக/நம்முவாவ மு.ம.வி., நம்முவாவ
ஏ.ஆர். ரிஸாபா – நிக/அபுக்காகம மு.ம.வி.
எம்.எஸ்.எம். அஷ்பாக் – நிக/பன்னவ மு.ம.க.
ஏ.எப். அம்ரா – இரக்காமம் – 04
ஏ.பீ. அஸ்ஹா – ப/அல்முர்ஷித் ம.வி., சில்மியாபுர
எம்.ர். மொஹமட் – நிககொல்ல, மாத்தளை
எம்.என்.எப். சஹ்லா – அந்நூர் ம.க., பாணகமுவ
எம்.இஸட்.ஏ. ஸாஹித் – மாத்தளை
எம்.ஜே.எப். டான்யா – கம்பளை ஸாஹிரா க.
ஏ.எச். ஆயிஷா ஹனான் – நிக/பன்னவ மு.ம.க.
எம்.எஸ்.எப். ஸாஹிமா – தர்கா நகர்
எம்.எம். இமாத் அஹ்மத் – அந்நூர் அ.க., நாரம்மள
என்.எப். அம்னா – நிக/அல் இல்மியா மு.ம.வி.
எம்.ஆர்.எப். ஹம்தா – நிக/நிகவரெடிய மு.ம.க.
எப். ரஸ்னா – கஹடோவிட்ட, வெயங்கொட
மர்யம் சுஹைல் – அலவத்துகொட
எம்.என்.எப். அஸ்பா – மதீனா தே.பா., சியம்பலகஸ்கொடுவ
எப்.எச். ஷிம்லா குல்தூம் – களு/அல்ஹஸனியா ம.வி.
டீ. சுக்ரா ஹஸ்னி – தி/அன்னஹார் பெ.ம.வி., மூதூர் – 05
எம்.எம். அக்ஸா பானு – குளி/ அல் ஹுமைரா ம.வி. வெவகம
எம்.எல்.எம். ஸஹாட் – ஹில்கன்ரி ச.பா., மடவளை
எம்.கே.எப். ஹம்தா – மல்வானஹின்ன, அக்குரணை
எம்.எஸ்.எப். சலீமா – இஹல கினியாம, வீரபொக்குன
எம்.என்.எப். முஸ்பிரா – மடலஸ்ஸ, கெகுணகொல்ல
ஜே.எம். சபீஸ் – ஐயா நகர், குச்சவெளி
எம்.ஏ. இல்மா – தல்கஸ்பிடிய மு.ம.வி.
எச்.ஜே.எப். ஹிபா – காசிம் நகர், குச்சவெளி
எம்.என். நவ்ரின் ஆரா – கிரி/சுலைமானிய்ய ம.வி., குறீகொடுவ
எஸ்.எம். ஆய்ஷா – ரம்புக்கனை
எம்.ஐ.எப். ஸைனப் நதா – கல்/முஸ்லிம் ம.ம.வி. சம்மாந்துறை
ஏ. ஜனூன் – அலவத்துகொட
ஏ.எம்.எப். சுஹைனா – மாவனல்லை
எம்.ஏ.எம். அன்சப் – மட்/அல் ஹிரா வி., காத்தான்குடி
எம். ஸல்வா – வடதெனிய, வெலம்பொட
எம்.ஆர்.எப். ரஸிய்யா – கே/பாபுல் ஹஸன் ம.க., வரகாபொல
என். இர்பான் அஸ்மா – நம்புலுவாவ, பஸ்யால
எம்.எஸ்.எப். ஸஹ்னா – மீரா பாலிகா ம.வி., காத்தான்குடி –03
எம்.ஆர்.ஆர். அமானி – நிக/அபுக்காகம மு.ம.வி.
எம்.எஸ். ஸாஸா – ஹெம்மாதகம
எம்.என். ஆமினா – நாபவல, அவிஸ்ஸாவல
ரிஸ்மா ரம்ஸான் – ஆமினா தே.பா., மாத்தளை
எம்.எஸ்.எப். ஹுமைரா – களு/இல்மா மு.வி., பாணந்துறை
எம்.எஸ்.எப். ஸல்ஹா – மகுலுவ, காலி
ஸன்பர் சஹீல் – அல் ஹிக்மா மு.ம.வி., தித்தவல்கால
ஏ.எம். அப்ரித் – அமீனிய்யா அ.க., நிகவரெடிய
நுப்லா நிஸ்தார் – பெலந்த முஸ்லிம் வி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සිංහල පිටුව


එම්.එස්.එම්. බස්ජාන් (Dip in Teaching)
ඩී. එස්. සේනානායක විදුහල
කොළඹ 07

# ගම්මානයේ සුන්දරත්වය

මගේ ගම පිටිසර ප්‍රදේශයක පිහිටා ඇත.

මගේ ගම ඉතා උස් කඳු වළල්ලකින් වට වී ඇත.

උදෑසන පායා එන හිරු සුන්දර දසුනකි.

පැසුණු වී කරළින් පිරී කෙත්යාය රන්වන් පැහැතිය.

සෑම ගෙවත්තෙම එළවළු පළතුරු වලින් පිරී පවතී.

සුන්දර ගම්මානය නිරන්තරයෙන්ම අපේ සිත් සතුටට පත් කරවයි.

ෆාතිමා රම්ලා රාෆි
3 වසර
ෆාතිමා මුස්ලිම් බාලිකා විදුහල- කොළඹ 12



# මී මැස්සෝ

මී මැස්සා කුඩා කෘමි සතෙකි. කුඩා වූවත් මේ අපූරු සත්ත්වයා උදෑසන ම පිබිදී මල් ගොමු වෙත ගොස් පැණි රැස් කරන්නේය. ඔවුන් වාසය කරන්නේ රංචු වශයෙනි එකට වාසය කරන මී මැසි රංචුවක "මී මැසි රාජධානියක්" ලෙසත් හඳුන්වයි. හේතුව රැජිණක් සිටීමයි. මී මැසි රංචුව පාලනය කරන්නේ එම රැජිණයි.

මී වදයක මී මැසි රැජිණත් වැඩකාර මැස්සියත් සහ පිරිමි මී මැස්සනුත් සිටිති. මේ අතරින් මලින් මලට ගොස් මල් පැණි එකතු කරන්නේ වැඩකාර මී මැස්සියන්ය. මී මැසි රැජිනගේ කාර්යය වන්නේ බිත්තර දැමීමයි. ඇය අනෙකුත් සතුන් අතරින් පහසුවෙන් වෙන් කර හඳුනාගත හැකිය. ඒ මී මැසි රැජිණ අන් මී මැස්සන්ට වඩා ශරීර ප්‍රමාණයෙන් විශාල වීම නිසාය. දිගැටි උදරයක් සහිත මී මැසි රැජිණගේ පියාපත් කෙටිය.

මී මැස්සන් බොහෝ වෙහෙස මහන්සි වී රැස් කරන මී පැණි ඉතා වටිනා ඖෂධයකි. එය නොයෙක් ලෙඩ රෝග සුවකර ගැනීම සඳහා භාවිතා කරයි.

මී වදයක වැඩ අවසන් වන්නේ මී මැස්සන් දහස් ගණනක් වෙහෙස මහන්සි වීමේ ප්‍රතිඵලයක් ලෙසයි. එකමුතුකමත්, උත්සාහයත් නිසා මිනිසුන් වන අපටත් විස්මය දනවන නිර්මාණයක් බිහි කිරීමට ඔවුනට හැකියි. මී මැස්සන්ගෙන් සිට අපිට උගත හැකි පාඩම වන්නේ එයයි.

ෆාතිමා ආරියා
ෆාතිමා බාලිකා ම.වි
ඕට්ටමාවඩි



# පොත්පත් කියවීමේ අගය

දියුණුවන පුද්ගලයකු තුළ තිබිය යුතු ප්‍රධාන ලක්ෂණයකි පොත්පත් කියවීම් එයින් දැනුම හා කුසලතා වර්ධනය වේ. සූර්යකාන්ත මලක් නිතරම සූර්යයා දෙසට හැරෙනවා මෙන් දියුණු වන පුද්ගලයා ද නිතරම පාහේ පොතපත ඇසුරු කරයි. පොත් කියවීමෙන් සාමාන්‍ය දැනුමද වර්ධනය වේ. ශ්‍රී ලංකාව එක් දියුණුවන රටක් හෙයින් ඇතැම් ජනයාට හෝ පාසල් සිසුන්ට පොත් කියවීමට කාලයක් නොමැති විය හැකිය. නමුත් පොතක් කියවන්න දිනකට පැයක් වෙන් කරගන්න. එවිට අපට සම්පූර්ණ මිනිසෙකු වීමට හැකිවේ. අපට මගතොටේ දී වුවද පොත් කියවීමට හැකිය. එයින් දැනුමද වර්ධනය වන අතර වටිනා කාලය නිකරුණේ නාස්ති නොවේ.

ෆරිහා රාසික්
මාවනැල්ල




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# මගේ සුරතලා

මගේ සුරතලා බල්ලෙකි. උගේ නම පපී. ඌ දුඹුරු පාටින් සහ සුදුපාටින් යුක්ත යි. උගේ ප්‍රියතම ආහාරය මස් මාංශ වන අතර ප්‍රියතම පාන වර්ගය කිරිමයි.

පපී සෑම දිනකදීම මා පාසල් ඇරී වෑන් රථයෙන් බසිනතුරු වලිගය සොලවමින් බලා සිටියි. ඌ මා පාසල් නිමාවී පැමිණෙන විට විගසින් පැමිණ මගේ ඇගේ එල්ලෙයි. ඌට බියක් දැනෙන සෑම විටකදීම මගේ කාමරය තුළට වැදී ගුලි ගැසී සිටියි. මා බෝල ගසන විට, ඌ ද පැමිණ මා සමග සෙල්ලම් කරයි. ඒත් මට ඇති එකම දුක අද ඌ ජීවතුන් අතර නොසිටීම යි.

✍ **ඉස්සත් සාරා**
**ආමිනා විද්‍යාලය, මාතලේ**



# ජීවිතයට

ඔබගේ ඉරණම කොයි විටකත් මැකීමට නොහැක.

අයහපතක් වූ විට අල්ලාහ් දෙවියන්ගෙන් අත් ඔසවා ප්‍රාර්ථනා කරන්න.

අල්ලාහ් විසින් ඔයාට දෙන ලද දෙයින් සෑහීමට පත්වන්න. ඔබ ධනවතෙක් වේ.

අධිකව සිනා නොවන්න. එය ඔබගේ සිත මරණයට පත් කරයි.

දෙමව්පියන්ගේ සිත් රිදෙන පරිදි කිසිම දෙයක් නොකරන්න.

මිතුරන් සිනහ ගැස්වීමට බොරු නොකියන්න. එය ඔබට විනාශය කැඳවයි.

තහනම් දෙයින් වැළකී සිටින්න. ඔබ බතිමතෙක් වේ.

✍ **එන්.එෆ්. නිදා සරින්**
**ශ්‍රේණිය - 4**
**කාවත්තමුනෙයි - අල් - අමීන් ම. විද්‍යාලය**



# සිංහල පිටුව



# වනාන්තර රැක ගනිමු

ශ්‍රී ලංකාව තුළ නොයෙකුත් වනාන්තර දක්නට ලැබෙයි. සිංහරාජය, විල්පත්තුව ආදිය ඊට කදිම නිදසුන් ය. මෙම වනාන්තර අප රටට උරුම වූ නිදසුන් ය. මෙම වනාන්තර අපට රටට උරුම වූ මහගු සම්පත් ය. එහෙත් වර්තමානයේ දක්නට ලැබෙන්නේ අති ශෝචනීය තත්ත්වයකි. මෙරට වනාන්තර දිනෙන් දින විනාශ මුඛයට ගමන් කරමින් පවතී. සොබාදම් මෑණියගේ දායාදයක් වූ මෙම සදාහරිත වනාන්තර විනාශ වන්නට නොදී මතු අනාගත පරපුර වෙනුවෙන් ආරක්ෂා කිරීම අප සැමගේ යුතුකමක් හා වගකීමක් වේ. මේ නිසා අපි මෙම සුන්දර සදාහරිත වනාන්තර සැමදා රැක ගනිමු.

✍ **අකීල් අහමඩ්**
**සහිරා විද්‍යාලය, කොළඹ**

# කෙවිලියකට ගී ගැයීම

අපේ ගේ ළඟ ගහේ අත්තක
වසා හෙමිහිට බලා මා දෙස
මගේ තනියට ගයයි මිහිරට
කෙවිලියක් ඇගේ කරවිය ගීතය
දිනක් ඇය බෝ විඩාබර ලෙස
එහිම සිටියා තටු පොරෝගෙන
කරවී ගී හඬ නොවිණ තුඩග
ගලා හැළුණේ මහා තනිකම
නිතින මා ගී හඬින් පොබ කළ
ඇගේ දුක මා හදේ ඇතිවිය
ඉතින් මම දැන් සුවරුහන් කර
ගයමි ගීයක් ඇගේ තනියට

✍ **ඩබ්.එම්. රිෆ්කි**
**ඕට්ටමාවඩි - ම.වි. විද්‍යාලය, ශ්‍රේණිය - 8**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA, PGDE)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்



# تَوَاضُعُ النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

## நபிகளாரது பணிவு

كَانَ النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ – أَشَدُّ النَّاسِ تَوَاضُعًا، فَكَانَ يَعُوْدُ الْمَرِيْضَ, وَيَتْبَعُ الْجَنَازَةَ، وَيُجِيْبُ دَعْوَةَ الْآخَرِيْنَ وَيُسَاعِدُ أَهْلَهُ فِي حَاجَةِ الْبَيْتِ وَكَانَ يَمُرُّ بِالصِّبْيَانِ فَيُسَلِّمُ عَلَيْهِمْ

நபியவர்கள் மிகவும் பணிவுள்ள மனிதராக இருந்தார். நோயாளியை சுகம் விசாரிப்பார். ஜனாஸா நல்லடக்கத்தில் ஜனாஸாவை பின்தொடர்ந்து செல்வார். ஏனையோரின் அழைப்புக்கு பதிலளிப்பார். வீட்டுத் தேவைகளின் போது தனது குடும்பத்துக்கு உதவி செய்வார். சிறுவர்கள் கடந்து செல்லும் போது அவர்களுக்கு ஸலாம் சொல்வார்.

## اَلْأَسْئِلَةُ:

مَاذَا تَفْعَلُ إِذَا مَرِضَ أَحَدٌ مِنْ زُمَلَائِكَ؟
உங்களது வகுப்பு நண்பரொருவர் நோய்வாய்ப்பட்டால் நீர் என்ன செய்வீர்?

إِذَا دَعَاكَ صَدِيْقُكَ إِلَى الطَّعَامِ بِالْهَاتِفِ فَهَلْ تَقْبَلُ دَعْوَتَهُ؟
உங்களது நண்பர் கைத்தொலைபேசியூடாக உங்களை சாப்பாட்டுக்கு அழைத்தால் அவரது அழைப்பினை ஏற்றுக் கொள்வீரா?

هَلْ تُسَاعِدُ أَخَاكَ عِنْدَمَا تَكُوْنُ فِيْ الْبَيْتِ؟
நீங்கள் வீட்டில் இருக்கும் போது உனது சகோதரருக்கு உதவி செய்வீர்களா?

إِذَا دَخَلْتَ بَيْتَكَ فَهَلْ تُسَلِّمُ عَلَى أُمِّكَ؟
தாய்க்கு ஸலாம் சொல்கிறாயா?

هَلْ تَحْتَرِمُ أُسْتَاذَكَ؟
உனது ஆசிரியரை மதிக்கிறாயா?

هَلْ تَدْعُوْ لِوَالِدَيْكَ؟
உனது பெற்றோருக்காக பிரார்த்திக்கிறாயா?

هَلْ تُحِبُّ إِخْوَانَكَ؟
உனது சகோதரர்களுடன் அன்பாக இருக்கிறாயா?

هَلْ تُنْفِقُ مَالَكَ فِيْ أَعْمَالِ الْخَيْرِ؟
நற்பணிகளில் உனது பணத்தை செலவு செய்கிறாயா?

هَلْ تَقْضِيْ أَوْقَاتَكَ فِيْ قِرَاءَةِ الْكُتُبِ؟
நீ புத்தகங்களை வாசிப்பதில் உனது நேரத்தை கழிக்கிறாயா?

هَلْ تُسَاعِدُ الْعَجَزَةَ؟
மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுகிறாயா?

## اَلْأَجْوِبَةُ:

نَعَمْ, أُسَاعِدُ الْعَجَزَةَ

أَقْضِيْ أَوْقَاتِيْ فِيْ قِرَاءَةِ الْكُتُبِ

نَعَمْ, أُنْفِقُ مَالِيْ فِيْ أَعْمَالِ الْخَيْرِ

نَعَمْ, أُحِبُّ إِخْوَانِيْ

نَعَمْ, أَدْعُوْ وَالِدَيَّ

نَعَمْ, أَحْتَرِمُ أُسْتَاذِيْ

نَعَمْ, أُسَلِّمُ عَلَى أُمِّيْ إِذَا دَخَلْتُ بَيْتِيْ

نَعَمْ, أُسَاعِدُ أَخِيْ عِنْدَمَا أَكُوْنُ فِيْ الْبَيْتِ

نَعَمْ أَقْبَلُ دَعْوَةَ صَدِيْقِيْ إِذَا دَعَنِيْ إِلَى الطَّعَامِ بِالْهَاتِفِ

إِذَا مَرِضَ أَحَدٌ مِنْ زَمَلَائِيْ أَعُوْدُهُ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# الْحَثُّ عَلَى الْعَمَلِ

# தொழில் புரியத் தூண்டுதல்

شَكَا رَجُلٌ إِلَى النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ – شِدَّةُ الْفَقْرِ فَقَالَ لَهُ : أَمَا عِنْدَكَ شَيْئٌ؟ قَالَ: لا. فَأَعْطَاهُ دِرْهَمَيْنِ , وَقَالَ لَهُ: إِذْهَبْ فَاشْتَرِ بِأَحَدٍ مَا طَعَامًا وَبِالْآخَرِ فَأْسًا, فَاحْتَطِبْ, وَبِعْ وَهَذَا خَيْرٌ لَكَ مِنَ الْمَسْأَلَةِ.

ஒரு மனிதர் நபியவர்களிடம் தனது கடுமையான வறுமை நிலை குறித்து முறையிட்டார். "உன்னிடம் ஏதாவது பொருள் இருக்கிறதா?" என நபிகளார் அம்மனிதரிடம் கேட்க "இல்லை" எனக் கூறினான். அப்போது நபியவர்கள் இரண்டு வெள்ளி நாணயங்களை அம்மனிதருக்கு வழங்கிவிட்டு "ஒரு வெள்ளி நாணயத்திற்கு உணவினையும் மற்றையதற்கு ஒரு கோடரியையும் விலை கொடுத்து வாங்கி அதன் மூலம் விறகு வெட்டி விற்பனை செய்து கொள். யாசகம் கேட்பதனை விடவும் இது உனக்கு மிகச் சிறந்ததாகும்" எனக் குறிப்பிட்டார்கள்.

---

## الْأَسْئِلَةُ:

١) مَنْ شَكَا إِلَى النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

٢) مَاذَا شَكَا الرَّجُلُ؟

٣) مَاذَا سَأَلَهُ النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

٤) مَاذَا أَجَابَ الرَّجُلُ

٥) كَمْ دِرْهَمًا أَعْطَاهُ النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

## الْأَجْوِبَةُ:

أَعْطَاهُ النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ دِرْهَمَيْنِ

أَجَابَ الرَّجُلُ :لاَ

سَأَلَهُ الصَّلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ أَمَا عِنْدَكَ شَيْئٌ

شَكَا الرَّجُلُ شِدَّةَ الْفَقْرِ

شَكَا رَجُلٌ إِلَى النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

---

## அறபுக்கவிதை

الْكَوْنُ يَزُوْلُ وَلاَ تُمْحَى فِيْ الدَّهْرِ صَحَائِفُ سُؤْدَدِنَا

பிரபஞ்சம் அழிந்து போகும். நாம் பெற்ற கண்ணியத்தின் ஏடுகள் காலத்தால் அழியாது.

بُنِيَتْ فِيْ الْأَرْضِ مَسَاجِدُنَا وَالْبَيْتُ الْأَوَّلُ كَعْبَتُنَا

பூமியில் எமது பள்ளிவாயல்கள் நிறுவப்பட்டுள்ளன. முதன்மையான இறை இல்லம் எமது க:.பாவாகும்.

هُوَ أَوَّلُ بَيْتٍ نَحْفَظُهُ لِحَيَاةِ الرُّوْحِ وَيَحْفَظُنَا


அது எமது ஆன்மிக வாழ்வில் பாதுகாக்க வேண்டிய முதல் வீடு. எமக்கும் பாதுகாப்பு கிடைக்கும் இடமாகும்.

عَلَمُ الْإِسْلَامُ عَلَى الْأَيَّامِ شِعَارُ الْمَجْدِ لِعِزَّتِنَا

காலமெல்லாம் நிலைக்கும் இஸ்லாத்தின் கொடியே எமது கண்ணியத்திற்கான கீர்த்தி மிக்க சுலோகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதகமான / நேர்மறையான மனப்பாங்கை விருத்தி செய்வது எப்படி?

*ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)*
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

சாதகமான மனப்பாங்கு **(Positive Attitude)**, பற்றிய கலந்துரையாடல்கள், கருத்துப்பரிமாறல்கள் மிகையாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வாழ்க்கையில் வெற்றி, நிம்மதி, சந்தோஷம், உற்சாகம், முன்னேற்றம், சுமுகமான குடும்ப உறவு, சமூக உறவு என பல்வேறு விடயங்களுக்கு பின்னணியாக அமையும் ஒரு முக்கிய அம்சமாக நேர் மறையான மனப்பாங்கு காணப்படுகிறது.

மாணவர்களைப் பொறுத்தவரை பாடசாலை வாழ்க்கையின் வெற்றிக்கு நேர்மறையான மனப்பாங்கு மிகவும் இன்றியமையாதது. பரீட்சைப் பெறுபேறுகள், போட்டி நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், மன்ற நிகழ்ச்சிகள், சக மாணவர்களுடனான உறவு, ஆசிரியர், அதிபர்களுடனான தொடர்பாடல் என ஒட்டுமொத்த அம்சங்களும் சிறப்பாக அமைய நேர்மறையான சிந்தனை தவிர்க்க முடியாத ஓர் அணிகலனாக, எல்லா மாணவர்களும் விருத்தி செய்ய வேண்டிய அம்சமாகக் காணப்படுகிறது.

மொத்தத்தில் ஒருவருடைய மனப்பாங்குதான் அவரின் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. அம்மனப்பாங்கு நேர்மறையானதாக இருந்தால் அவருடைய வாழ்க்கையும் நேர்மறையானதாக அமையும்; அவருடைய மனப்பாங்கு எதிர்மறையானதாக அமையுமாயின் அவருடைய வாழ்க்கையும் எதிர்மறையானதாக அமைந்துவிடும். மாணவர்களுக்கும் இது பொருந்தும். எனவே, வாழ்க்கையின் வெற்றியைத் தீர்மானிப்பதில் நேர்மறையான மனப்பாங்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது எனலாம்.

## மனப்பாங்கு என்றால் என்ன?

நாம் ஒரு நிகழ்ச்சியை, பொருளை, ஒரு விடயத்தை எப்படிப் பார்க்கின்றோம், அப்பொருள், விடயம், நிகழ்ச்சி குறித்து எவ்வாறு வியாக்கியானம், விளக்கம் கொடுக்கின்றோம் என்பது தான் மனப்பாங்கு ஆகும். உதாரணமாக, படிப்பது குறித்து ஒருவருடைய விளக்கம் ''படிப்பதில் பயனில்லை'' என்றும் இன்னொருவருடைய விளக்கம் ''படித்தால்தான் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்'' என்றும் அமையலாம். கற்றல் குறித்து முதலாமவரின் விளக்கம் எதிர்மறையானதாகவும் இரண்டாமவரின் விளக்கம் நேர்மறையானதாகவும் காணப்படுகிறது.

இந்த உதாரணத்தைப் பொறுத்தவரை முதலாமவர் படிப்பைக் கைவிடுவார்; இரண்டாமவர் படிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வெற்றி பெறுவார் என்பதே ஆய்வுகளின் முடிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேரான மனப்பாங்கை விருத்தி செய்வது எப்படி?**

நேரான மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளல், விருத்தி செய்தல் எவ்வாறு? என்பது குறித்து பல்வேறு வகையான விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றுள் 11 விடயங்களைப் பற்றி நாம் இங்கு நோக்குவோம். அவற்றைக் கடைப் பிடிக்க முயற்சி எடுக்கும் சந்தர்ப்பங்களில் நீங்களும் வாழ்க்கையில் வெற்றி பெற லாம், இன்ஷா அல்லாஹ்.

1. **நேர்மறையான/சாதகமான அம்சங் களைத் தேடுபவராக இருங்கள் (Be a Positive Finder)**

நாளாந்தம் நாம் எத்தனையோ விட யங்களைப் பார்க்கின்றோம், காண்கின் றோம். எத்தனையோ மனிதர்களைப் பார்க்கின்றோம். பல்வேறு வகையான செய்திகளைக் கேட்கின்றோம். இவை எல்லாவற்றிலும் ஏதாவது நன்மையான, நமக்குச் சாதகமான ஒரு விடயம் இருக் கின்றதா என்பதை தேடிப் பாருங்கள். இவ்வாறு தொடர்ச்சியாக செயற்படும் போது அது ஒரு பண்பாக மாறிவிடும். உலகத்தில் இருக்கும் எந்த ஒரு விடய மாகினும் அதில் ஏதோ ஒரு நன்மை இருக்கத்தான் செய்கிறது. அதற்காக எதிர்மறையான, தீமையான விடயங்கள் இல்லை என்று குறிப்பிட முடியாது. எனினும் முதலில் தீமையான விடயங் களைத் தேடாமல் நன்மையான விடயங் கள் ஏதாவது உள்ளதா எனத் தேடிப் பார்க் கும் பழக்கத்தை வளர்த்தால் அதுவே ஒரு நேர்மறையான மனப்பாங்காக மாறி விடும்.

உதாரணமாக, இந்தப் பாடசாலை சரியில்லை, வகுப்பறை சரியில்லை, இந்த ஆசிரியர் சரியில்லை, வகுப்பு நண்பர்கள் சரியில்லை என்று பார்ப்பதைவிட இங்கு சொல்லப்பட்ட விடயங்களிலுள்ள சரி யான, சாதகமான விடயங்கள் என்னென்ன என்பதைத் தேடிப் பார்க்க வேண்டும்.

எனவே, எதிலும் நேர்மையான, நன்மையான விடயங்களைத் தேடிப் பார்க்கும் திறமையை வளர்த்துக் கொள்வது நேர்மையான மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள துணை செய்கிறது.

2. **நேர்மறையான சுய பேச்சு (Positive Self Talk)**

சுய பேச்சு (Self Talk) என்பது நாளாந்தம் நான் என்னோடு என்ன பேசிக் கொண்டிருக்கின்றேன் என்பதாகும். ஒவ்வொரு நாளும் நீங்கள் உங்களுடன் பேசிக்கொள்ளும் விடயங்கள் நேர்மறையானதாக இருக்கின்றதா? சாதகமானதாக இருக் கின்றதா அல்லது எதிர்மறையானதாகவும் பாதகமானதாகவும் இருக்கின்றதா என தேடிப் பாருங்கள். பிறருடன் நாம் என்ன பேசிக் கொண்டிருக்கின்றோம் என்பதைவிட நாம் எம்முடன் என்ன பேசிக் கொண்டிருக்கின்றோம் என்பது மிக முக்கிய மானதாகும்.

நீங்கள் உம்முடன் பேசும் பேச்சுக்கள் எப்போதும் நேர்மறை யானதாக, சாதகமானதாக இருக்க வேண்டும். உதாரணமாக, நான் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவது சாத்திய மில்லை, போட்டியில் வெற்றியீட்டுவது கஷ்டம், மன்ற நிகழ்ச் சிகளில் என்னால் நன்றாக பேச முடியாது, என்னால் ''இய லாது'', ''முடியாது'', ''சாத்தியமில்லை'' என்ற எதிர்மறையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து என்னால் ''முடியும்'', ''சாத்தியமாகும்'', ''சாதிக்கலாம்'' என்ற சொற் பிரயோகங்களைப் பயன்படுத்துங்கள்.

பரீட்சை பற்றிய பயம், பதகளிப்புள்ள மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைவருடைய சுய பேச்சுக்களும் எதிர்மறையானதாக இருப்பதைக் காணலாம். அதனால்தான் அவர்கள் பரீட்சை நெருங்கும்போது தலைவலி, வயிற்றுவலி, வாந்தி, மயக்கம், வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சினை களுக்கு முகங்கொடுக்கின்றனர். இதிலிருந்து தவிர்ந்து கொள் வதற்கான அடிப்படை சிகிச்சை நுட்பங்களில் ஒன்று நேர் மறையான, சாதகமான சுய பேச்சாகும் (Positive Self Talk).

**உதாரணமாக:**

என்னால் வாசிக்க முடியும்.

என்னால் தேவையான விடயங்களைப் பாடமாக்கிக் கொள்ள முடியும்.

தொடர்ச்சியாகப் படித்தால் எனது ஞாபக சக்தி அதி கரிக்கும்.

ஒவ்வொரு நாளும் படிப்பதை அன்றைக்கே மீட்டினால் ஞாபக சக்தியை அதிகரிக்கலாம்.

நான் நன்றாகப் படித்துள்ளேன்.

பரீட்சையில் வெற்றி பெறுவேன்.

இவ்வாறான விடயங்களை அடிக்கடி நாம் நம்முடன் பேசும்போது நமது மூளை நமது சிந்தனையில் நிலையான, சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும். அது வெற்றிக்கு வழி வகுக்கும்.

இதுபோன்றுதான் வாழ்க்கையில் எந்தவொரு விடயமும் வெற்றி பெற வேண்டுமானாலும் அது குறித்த எமது சுய பேச்சு (Self Talk) எப்போதும் நேர்மறையானதாகவும் சாதகமான தாகவும் அமைய வேண்டும்.

**28 ஆம் பக்கம் பார்க்க...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர் தின சிறப்பு சிறுகதை**

**சிறுகதை**

# எனக்கும் உணர்வுகள் உண்டு...


**நீரா முஸ்தபா**
**தல்கஸ்பிடிய**


அன்றைய கலை நிகழ்ச்சியை திறம்பட நடாத்துவதற்கு பொருத்தமானவள் பர்வின் மட்டும்தான். அவளது அழகுக்கும் அறிவுக்கும் அப்பால் இனிமையான குரல் வளமும் இருந்ததால் அவளையே சிறுவர் தின நிகழ்ச்சிகளை அழகாகத் தொகுத்து வழங்குமாறு அதிபர் பணித்திருந்தார்.

''சே! இந்த முக்கியமான நேரத்துல இவள் எங்க போனாள்...?'' அன்புத் தோழியை கடிந்து கொண்டாள் அஸ்னா.

''அப்பாடா... கண்டுபிடிச்சிட்டேன். வேப்ப மரத்தடியில உக்காந்து வேப்பங்காத்து வாங்குறியா? உடம்புக்கு ஒன்னும் இல்லயே?''

குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்து புன்னகைத்தாள் பர்வின்.

''உடம்புக்கு ஒன்றும் இல்லடீ... காயப்பட்ட உள்ளம்தான் இன்னும் வலியில் தவிக்குது.''

''என்னடீ உளர்றே! இந்தக் கல்லூரியில எல்லாருமே பர்வின் பர்வின்டு ஒன்னத்தானே சுத்துறாங்க... உன் மனச யாருமே காயப்படுத்தினத நான் கண்டதே இல்லயே! வீட்ல ஏதாவது பிரச்சினையா? என்கிட்ட சொல்றதுல ஒன்டும் தப்பில்லயே!''

''ஹும்''

ஆழமான ஒரு பெருமூச்சை வெளியிட்டவளாக சிறு வயதில் தனக்கு நேர்ந்த அனுபவங்களை பகிரத் தொடங்கினாள் பர்வின்.

''நான் ஐந்தாம் ஆண்டு படிக்கிறப்போ, பட்ட கஷ்டங்களும் துன்பங்களும் இன்னும் அப்படியே ஏன்ட ஆழ்மனசுல மங்காம இருக்குடீ? எங்க கிராமத்துல சின்ன ஸ்கூல். எல்லாருமே பாஸாகோனும்றது அவங்க கனவாக இருக்கலாம். ஆனா, ஒரு நாள் தவறி கிளாஸ் போகாட்டியும் அடிதான். அதுவும் தாங்க முடியாத அடி!''

''அப்பிடிப் பார்க்கப் போனா நான் எத்தனையோ கிளாஸ்கள சில காரணங்களுக்காக விட்டிருக்கேனே. அந்தப் பெரிய கல்லூரில எங்களுக்கு அடிச்சதே இல்ல.''

இடை புகுந்த அஸ்னாவிடம் ''கிளாஸ் விஷயத்த விடு. ஒரு நாள் தவறி 'டை' கட்டாம போய்ட்டேன். அப்பாடா! பிரின்ஸிபல் என்ன செஞ்சார் தெரியுமா? போய்ஸ், கேள்ஸ்னு பார்க்காம எல்லார் முன்னாலயும் என்னத் தண்டிச்சாரே. தாங்க முடியாத






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெக்கம் ஒரு பக்கம். இன்னொரு பக்கம் அவமானத்துல எப்படிக் கூனிக் குறுகிப் போனேன் தெரியுமா? நான் சின்னப் பொண்ணாக இருக்கலாம். ஒரு நாள் தவறினதுக்கு இப்பிடியா மானபங்கப்படுத்துறது? அந்த நாள் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள்!'' சொன்னவள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

''ஏய் பர்வின் அழாதேடீ! நீ இப்ப பெரியவள். பழசயெல்லாம் மறக்கனும்!''

ஆறுதல் சொன்ன அஸ்னாவிடம்

''பிஞ்சு வயசுல பதியுறதுகள் எப்படி மறக்க முடியும்? உனக்குப் பட்டிருந்தா புரிந்திருக்கும் என்னோட வலி!''

விரக்தியுடன் வெளிவந்த வார்த்தைகளில், வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்ந்து கொண்டாள் அஸ்னா.

''டை என்பது பாடசாலைச் சீருடையின் ஓர் அங்கமாக இருக்கலாம். ஒரு நாள் தவறினத்துக்கு இப்படி அவமானப்படுத்தக் கூடாதுதான்.''

அஸ்னாவுக்கும் விழிகளில் நீர் நிறைந்தது.

''அது மட்டுமல்ல அஸ்னா! எங்க வீட்ல எல்லாருமே சின்னச் சின்னக் குழந்தைகள். எங்க உம்மாக்கு கைக்குழந்தை ஒன்னும் இருந்திச்சி. ஒரு தடவ தொடர்ந்து விடாம மழை. தம்பிட 'ஷூ'க்குள்ள எப்பிடியோ நீர் போயிருக்கு. உம்மாக்கும் கவனிக்க நேரமில்ல. தம்பியும் 'ஷூ' போடாம ஸ்கூல் போனான். என்ன ஏதுன்னு எங்க நெலமய விசாரிக்கல்ல. அண்டக்கி என் கண் முன்னால அவன் பட்ட வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல! இப்பிடி எத்தனையோ விஷயங்கள அடுக்கிக் கொண்டே போகலாம். சின்ன ஸ்கூல்கள்ல சிறுசிறு விடயங்கள எல்லாம் பெரிசாப் பாக்குறாங்க.''

''ஒங்க ஸ்கூல்ல சிறுவர் தினத்த எல்லாம் கொண்டாடுவாங்களா?'' அஸ்னா கேட்டதும்தான் தாமதம்,

''அதுக்கு ஒன்றுமே கொறச்சல் இல்ல. இந்தத் தினத்துல மட்டும் சிறுவர்கள எப்படியெல்லாம் கண்ணியப்படுத்தேலுமோ அப்படி எல்லாம் கண்ணியப்படுத்துவாங்க. போட்டிகள் வெச்சி பரிசுகளும் கொடுப்பாங்க. அவ்வளவு தான் மறுபடியும் பழைய குருடி கதவத் திறடின்ற மாதிரிதான் கத... சிறுசுகள ஒரு நாள் மட்டும் கண்ணியப்படுத்தினா இவங்க கடம முடிஞ்சிடும்னு நினைக்கிறாங்க போல...''

''பின்தங்கிய மாணவர்கள், படிக்காத பிள்ளைகள், வசதி குறைஞ்ச பிள்ளைகள், சின்னச் சின்ன பிள்ளைகள் இருக்கிற வீடுகள், எதுங்குறத எல்லாச் டீச்சர்ஸ்ஸும் கட்டாயம் தெரிஞ்சுக்கனும். ஒவ்வொரு புள்ளகள்டயும் வீடுகளுக்குப் போய்ப் பாக்கனும்னு எங்கட கல்லூரிப் பிரின்ஸிபல்ட ஓடர்! எங்க வீட்டுக்கும் எங்க மிஸ் வந்திருக்காங்க.''

சிறு வயது முதல் தான் படித்த கல்லூரியின் பெருமையை நினைவுகூர்ந்தாள் அஸ்னா.

''அது எவ்வளவு நல்லம். எங்கட கிராமத்துல பல சிறுசுகள் டீச்சஸ் கிட்டயும் அதிபர்கிட்டாலயும் தகுந்த காரணமில்லாம, தண்டிக்கப்பட்றதப் பாக்குறப்போ ரொம்ப வேதனையா இருக்குடீ? படித்து நல்ல பெயர் ஸ்கூலுக்கு எடுக்கோனும்னு எதிர்பாக்குறவங்க, நாங்க நல்ல பண்பாடுள்ளவர்களாக வரனும்னும் எதிர்பார்க்கனும். எங்களைப் போன்ற சின்னஞ் சிறு மாணவ நெஞ்சங்களுக்கும் உணர்வுகள் உண்டுங்கறதப் புரிஞ்சுக்கனும்.

சிறுவர்கள் கண்ணியப்படுத்த இந்த ஒரு நாளோ, ஒரு மாதமோ போதாது. எங்கட நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவங்க சிறுவர்களோட எவ்வளவு அன்பாக இருந்திருக்காங்க. அது போல நாங்களும் அவங்களோட அன்பாக இருக்கனும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பத எல்லாரும் உணரனும்.''

''பர்வின், அஸ்னா ரெண்டு பேரும் என்ன செய்றீங்க? டைம் சரி... நிகழ்ச்சி தொடங்கப்போகுது...'' டீச்சர் அழைத்ததும்தான் தாமதம், ''ஆசிரியர்கள நாங்க கண்ணியப்படுத்தனும். வா அவசரமாப் போவோம்'' பர்வினின் அறிவுத் திறமையை மனதால் மெச்சிக் கொண்டவளாக, தோழியின் கரங்களை ஆழமாகப் பற்றிக் கொண்டாள் அஸ்னா.


**அடுத்த இதழில்...**

**எப். தமீனா தமீம் (ஜீலான் ம.க., பாணந்துறை) எழுதிய ''மனக்கீறல்கள்'' எனும் சிறுகதை பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- Every Journey begins with a single step -

தேசிய கபடி அணியில் இணைந்து இந்தோ னேஷியாவில் கடந்தமாதம் ஆகஸ்ட் 18 தொடக்கம் செப்டெம்பர் 02 வரை நடைபெற்ற ஆசிய விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றிய முதலாவது முஸ்லிம் வீரர் என்ற பெருமையை அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியை சேர்ந்த அஸ்லம் சஜா பெற்றுள்ளார்.

நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் வீரரான இவர் மிகச் சிறந்த கபடி வீரராக தனது திறமையை வெளிப்படுத்தியிருந்த வேளையிலேயே இந்த வாய்ப்பின் மூலம் தனது சொந்த ஊரான நிந்தவூரிற்கும் கிழக்கு மாகாணத்துக்கும் அம்பாறை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

**சந்திப்பு: நபீல் அபாபீல்**

# வெற்றிகளுக்கு வேராய் இருந்தவர் எனது ஆசிரியர்தான்!

## தேசிய கபடி அணியில் முதல் முஸ்லிம் வீரர் அஸ்லம் சஜா

மேலும் இவர் கடந்த 2016 ஆம் ஆண்டு ஈரானில் இடம்பெற்ற ஆசிய கனிஷ்ட கபடி போட்டியில் இலங்கை அணி சார்பாக பங்குபற்றி இலங்கைக்கு வெண்கலப்பதக்கம் பெற்றுக் கொடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பெருமைகளை தன்னகத்தே கொண்டுள்ள இவ்வீரர் வழங்கிய பேட்டியை வாசகர்களுக்காக தருகிறோம்.

**அகரம்: உங்களை பற்றி கூறுங்கள்?**

**அஸ்லம் சஜா:** எனது பெயர் அஸ்லம் சஜா. நான் நிந்தவூர் பிரதேசத்தை சேர்ந்தவன். எனது குடும்பத்தில் நான்கு பேர். அதில் நான் கடைசி. ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை கமு/நிந்தவூர் அல் மதீனா மஹா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன்.

**அகரம்: நீங்கள் கபடி விளையாட்டை தெரிவு செய்ய காரணம் என்ன?**

**அஸ்லம் சஜா:** பாடசாலை காலங்களில் எமது பாடசாலை உயர் மாணவர்கள் மைதானத்தில் கபடி விளையாட்டை விளையாடுவார்கள். அப்போதே கபடி விளையாட வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அதைத் தொடர்ந்து விளையாட வேண்டுமென்று பல தடவைகள் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடினேன். பின்னர் எனக்கு பல வெற்றி களை ஈட்டித் தந்தது.

**அகரம்: நீங்கள் கலந்து கொண்ட போட்டி கள் எவை? அதில் பெற்ற வெற்றிகளை பற்றி கூறுங்கள்?**

**அஸ்லம் சஜா:** பாடசாலை ரீதியாகவும் மாவட்ட தேசிய இளைஞர் மன்றம் ஊடாகவும் போட்டி களில் கலந்து கொண்டு தேசிய மட்டம் வரை சென் றேன். பாடசாலை கோட்ட வலய மாவட்ட மட்டங் களில் பல சான்றிதழ்கள் கிடைத்தன. தேசிய இளை ஞர் சேவை மன்றத்தினால் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் தொடர்ந்து 10 வருடங்கள் கபடி அணிக்கு தலைமை தாங்கியுள் ளேன். அதன் பின் எனது நிந்தவூர் பிரதேசத்திலுள்ள எனது விளையாட்டுக் கழகமான மதீனா விளை யாட்டுக் கழகத்தின் உறுப்பினரும் இராணுவ வீரர்களான என் இரு நண்பர்கள் எம்.ரீ.எம். சுபான் மற்றும் எம்.ஐ. இஸ்மாயில் ஆகியோரின் ஆலோசனைப்படி நாங்கள் நிந்தவூரிலிருந்து 8 பேர் தெரிவுப்போட்டி ஒன்றிற்கு ஆசிரியர் எஸ்.எம். இஸ்மத் அவர்களின் தலைமையில் சென்றோம்.

முதலாவது தெரிவு கண்டியில் இடம்பெற்றது. அதில் நான் தெரிவாகினேன். பின்னர் அத்தெரிவு தடைசெய்யப்பட்டது. அதன் பின்னர் கொழும்பு டொரிங்டன் உள்ளக அரங்கில் இடம்பெற்ற தெரிவின்போது நான் தேசிய ரீதியில் 8ஆவது நபராக தெரிவு செய்யப்பட்டேன். பின்னர் 2016 இல் ஈரான் நாட்டில் இடம்பெற்ற போட்டியில் கனிஷ்ட அணியில் விளையாடினேன். அதில் எங் களுக்கு மூன்றாம் இடம் கிடைத்தது. 2016இல் தேசிய மட்ட கடற்கரை போட்டிகளில் தங்கப் பதக்கத்தையும் பெற்றேன். பின்னர் எனக்கு முப்படையின் அணியில் விளையாட வாய்ப்பு கிடைத்தது. அப்போது நான் இலங்கை கடற்படை அணிக்காக விளையாட வேண்டுமென உத்தேசித் தேன். பின்னர் கடற்படை அணிக்காக விளையாடி னேன். அவ்வேளையில்தான் இலங்கை தேசிய கபடி அணிக்கான தேர்வு போட்டியொன்று இடம் பெற்றது. அதில் நான் தேசிய அணிக்கு தெரிவா னேன். பின்னர் தற்போது 12 பேர் தரப்படுத்தலில் எனக்கு மூன்றாமிடம் கிடைத்தது. அத்துடன் தேசிய கபடி அணியின் முக்கிய 5 வீரர்களுள் நானும் உள்ளேன். மேலும் இக்கபடி அணிக்குச் சென்ற முதலாவது முஸ்லிம் வீரர் என்ற பெருமை எனக்குண்டு.

**அகரம்: உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?**

**அஸ்லம் சஜா:** இந்தியாவில் நடைபெறும் கபடி விளையாட்டு போட்டியில் விளையாட வேண்டுமென்பதே எனது இலட்சியமாகும்.

**அகரம்: குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கபடி என்பது பிரசித்தம் அல்ல. ஆனாலும் நீங்கள் இளைஞர், யுவதிகளுக்கு யாது கூற விரும்புகிறீர்கள்?**

**அஸ்லம் சஜா:** நீங்கள் எத்துறையை தெரிவு செய்தாலும் அத்துறையில் இலக்கு இருக்க வேண் டும். கபடியை பொறுத்தவரையில் விடாமுயற்சி மற்றும் சிறந்த பயிற்சி மேற்கொண்டால் சிறந்த இளைஞர்-யுவதிகள் அணியை கிழக்கில் உருவாக் கலாம். இதன் மூலம் கிழக்கு மாகாணத்தை கபடி துறையில் முன்னேற்றலாம்.

**அகரம்: நீங்கள் யாருக்கு நன்றி கூற விரும்புகிறீர்கள்?**

**அஸ்லம் சஜா:** முதலில் இறைவனுக்கும் எனது பெற்றோருக்கும் பாடசாலை அதிபர் வழிநடத்திய ஆசிரியர்கள் பயிற்றுவிப்பாளர்கள், மதீனா விளை யாட்டு கழகத்தினர் நலன் விரும்பிகள், எமது பிரதேச அரசியல்வாதிகளுக்கும் மற்றும் குறிப்பாக ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை எனக்கு பயிற்று வித்த எஸ்.எம். இஸ்மத் ஆசிரியர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**இலங்கைக்குரிய பறவைகள்**



இலங்கையின் மத்திய மலைநாட்டின் மலைப்பகுதிகளில் காணப்படும் இலங்கைக்கே உரிய பறவை இனமாகும். இந்த வகைப் பறவை இனங்களை ஹொடன் சமவெளியில் காணமுடியும்.

கரு நீலநிறச் சிட்டு

விஞ்ஞானப் பெயர்: **Eumyias sordida**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 ஆம் பக்கத் தொடர்...

### 3. உங்களிடம் இருப்பவற்றுக்கு நன்றியுடையவர்களாக இருங்கள்
**(Be thankful What You have)**

இந்த உலகத்தில் நாம் நிறையப் பெற்றிருக்கின்றோம். இயற்கை, தாய் - தந்தை, உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், அரச - அரச சார்பற்ற நிறுவனங்கள் என எம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் எமக்குப் பல விடயங்களைத் தந்துள்ளன. இதற்கு கைமாறாக நாம் என்ன செய்துள்ளோம் என்பதைச் சிந்தித்து நன்றியுணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். எனவே, ஒவ்வொரு நாளும் தூங்கச் செல்வதற்கு முன் நாம் யாருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற ஒரு பட்டியலைத் தயாரித்து அடுத்த நாள் முடியுமானவரை நன்றிகளைத் தெரிவித்து விடுங்கள். இவ்வாறு செய்யும்போது நான் ஒரு நல்ல மனிதன் என்ற உணர்வு ஏற்படுவது மாத்திரமன்றி திருப்தியும் ஏற்படும். இது நேர்மறையான மனப்பாங்கு வளர வழிவகுக்கிறது.


### 4. எப்போதும் நேர்மறையான மனிதர்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ளுங்கள்
**(Be with positive people)**

நாம் யாருடன் பழகுகின்றோம், நேரத்தைக் கழிக்கின்றோம்? என்பது மிக முக்கியமான அம்சமாகும். எதிர்மறையாகச் சிந்திக்கின்ற, நடக்கின்ற மனிதர்களுடன் பழகும்போது அத்தகைய சிந்தனைகளும் பழக்கவழக்கங்களும் எம்மையும் பாதிக்கின்றன. அவ்வாறே நேர்மறையான மனிதர்களுடன் சேர்ந்திருக்கும்போது அவர்களுடைய சிந்தனைகளும் செயற்பாடுகளும் எம்மில் தாக்கம் செலுத்துகின்றன. நல்ல, நேர் மனப்பாங்குள்ள நண்பர்கள், மனிதர்களுடன் பழகும்போது எம்மிலும் நேர் மனப்பாங்கு விருத்தியடைகின்றது.

எனவே, நீங்கள் எப்போதும் நேர் மனப்பாங்குள்ள நண்பர்களைத் தெரிந்து அவர்களுடன் உங்களுடைய உறவை, தொடர்புகளை வைத்துக் கொள்ளுங்கள். அது உங்ளுடைய நேர்மறையான மனப்பாங்கு விருத்திக்கு வித்திடும்.

### 5. சாதகமான ஊடகங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள் (Choose a positive Media)

ஊடகத்துறை அபரிமிதமாக வளர்ச்சியடைந்துள்ள ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். ஊடகங்களிலிருந்து நாளாந்தம் வெளியாகும்



செய்திகள் எமக்குச் சாதகமானதாகவும் பாதகமானதாகவும் காணப்படுகின்றன. வட்ஸ்அப், டுவிட்டர், பேஸ்புக், யுடியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் நாளாந்தம் கொலை, கொள்ளை, விபத்து, தற்கொலை, தற்கொலைச் சிந்தனை போன்ற மோசமான செய்திகள் அதிகம் வெளியாகின்றன. அதே வேளை கல்வியறிவு, ஆன்மிகம், கண்டுபிடிப்புகள், வாழ்க்கை மற்றும் தொழில் வழிகாட்டல்களுடன் தொடர்பான செய்திகளும் வெளியாகின்றன.

மாணவர்களாகிய நாம் எப்போதும் எமது எதிர்காலம், இலக்கு, ஆன்மிகம், கல்வி முன்னேற்றம் என்பவற்றுடன் தொடர்புபட்ட எமக்குச் சாதகமான ஊடகங்களை நாம் தெரிவு செய்து கொள்ள வேண்டும். எமக்குப் பொருத்தமில்லாத தகவல்களுடன் நாம் தொடர்புபடும்போது பிரயோசனமற்ற தகவல்கள் எம்மில் நிறைந்து பல்வேறு பிரச்சினைகளுக்கும் உளச்சிக்கல்களுக்கும் வழிவகுக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் ஒரு மனிதனை வழிநடாத்துவதில் ஊடகங்களின் வகிபாகம் குறிப்பாக சமூக ஊடகங்களின் வகிபாகம் மிகப் பரந்தது. சாதகமான ஊடகங்களையும் தகவல்களையும் தெரிவு செய்தால் எமது எதிர்காலம் சிறப்பாக அமையும். பாதகமான, எதிர்மறையான **(Negative)** ஊடகங்களையும் செய்திகளையும் தெரிவு செய்தால் எமது எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடும். எனவே, உங்களது எதிர்காலத்தின் வெற்றிக்கு எப்போதும் சாதகமான, நேர்றையான **(Positive)** ஊடகங்களைத் தெரிவு செய்யுங்கள்.

### 6. முன்னேற்றத்தைத் தேடுங்கள்
**(Search for Improvements)**

வாழ்க்கையில் எது செய்தாலும் அதில் முன்னேற்றம் அடைவதற்கான வழிமுறைகளைத் தேடுங்கள். பரீட்சையில் பெறும் புள்ளிகளில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு, முதலுதவி, போட்டி நிகழ்சிகள், விளையாட்டுப் போட்டி, கண்டுபிடிப்பு முயற்சிகள், பாடப் புறச்செயற்பாடுகள், சமூக சேவை என எது செய்தாலும் அதில் நாளுக்கு நாள் முன்னேற்ற மடைவதற்கு ஏதும் வழிமுறைகள் உண்டா என தேடி அறிந்து அவற்றை அமுல்படுத்த முயற்சி செய்யுங்கள். இது நேர்மறையான மனப்பாங்கு விருத்திக்கு வழிவகுக்கும்.

7. **நேர்மறையான / சாதகமான புத்தகமொன்றை வாசியுங்கள் (Read a positive book)**

மாணவர்கள் என்ற வகையில் நிறைய நூல்களை வாசிப்பீர்கள். நாம் புத்தகங்களைத் தெரிவு செய்யும்போது அவை எம்மில் நல்ல மனப்பாங்கை விருத்தி செய்யத் தூண்டுவதாக அமைய வேண்டும். அறிஞர்கள், கல்விமான்கள், தலைவர்கள் மற்றும் சாதனையாளர்களின் வெற்றிக் கதைகள், தியாகங்கள், முன்னேற்றங்கள் பொதிந்துள்ள நூல்களைத் தெரிவு செய்து வாசிக்க வேண்டும்.

நேர்மறையான மனப்பாங்கை விருத்தி செய்யும் வகையில் எழுதப்பட்ட பல்வேறு நூல்கள் இன்று சந்தைகளில் மலிந்து கிடக்கின்றன. நாளாந்தம் 50 ரூபாய் பணம் கொடுத்து ஒரு சீடியை வாங்கி இந்திய சினிமாப் படம் பார்த்து வாழ்க்கையைச் சீரழிப்பதைவிட அவற்றைச் சேமித்து 250 ரூபாவுக்கு ஒரு புத்தகத்தை வாங்கி வாசிப்பதன் மூலம் நேர்மறையான மனப்பாங்கை எம்மில் வளர்த்துக் கொள்ளவும் எதிர்கால சவால்களைச் சமாளிக்கும் ஆளுமைகளை முன்னேற்றிக் கொள்ளவும் முடியும்.

---




சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கான முன்னுரிமையினை வழங்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். இதற்காக உலகின் அனைத்து நாடுகளிலும் உலக சிறுவர் தினம் அல்லது விசேட சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 1856 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை ஆரம்பிக்கப்பட்ட உலக சிறுவர் தினம் உலகமெங்கும் ஜூன் 1ஆம் திகதி, நவம்பர் 20ஆம் திகதி என வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்பட்டு வருகின்ற போதும் இலங்கையில் ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகம் பூராகவும் சிறுவர் தினம் முதன்முறையாக கொண்டாடப் பட்டது 1955 ஒக்டோபர் 1 ஆம் திகதியாகும். இவ் வருடத்திற்கான சிறுவர் தின தொனிப்பொருள் ''தைரியத்தோடு முன்னேறிச் செல்வதற்கு எமது சிறுவர்களைப் பலப்படுத்துவோம்'' **(strengthen Our Children to go forth with Courage)** என்பதாகும்.

**UNICEF இன் சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரகடனங்கள்:**

- சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக பிரகடனப்படுத்தப்பட்ட விசேட உடன்படிக்கைகள்
- 1924 இல் சிறுவர் உரிமை தொடர்பான உடன் படிக்கை
- 1959 இல் சிறுவர் உரிமை தொடர்பான அறிக்கை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- மனித உரிமைகள் தொடர்பான விசேட உடன் படிக்கை
- சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை

## உலக ஆசிரியர் தினம்
## ஒக்டோபர் -06

1994 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் உலக ஆசிரியர் தினம் ''யுனெஸ்கோ'' நிறுவனத்தின் சிபாரிசுக்கமைய பிரகடனப்படுத்தப் பட்டது. ஐக்கிய நாடுகள் சபையானது உலக ஆசிரியர் தினமாப வருடத்தின் ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதியை பிரகடனப்படுத்தியிருந்த போதிலும் இலங்கையில் ஒக்டோபர் 06 ஆம் திகதியே ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. இவ்வருடத்திற்கான ஆசிரியர் தின தொனிப் பொருள் **The right to education means the right to a qualified teacher** என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MOTIVATIONAL STORY - 09

எம்.எஸ்.எம். நுஸ்ரி (நளீமி, BA) | பணிப்பாளர், பிஸ்மி கிண்டகாடன், காத்தான்குடி

# இதுவும் கடந்து போகும்

''இதுவும் கடந்து போகும் என வாழ்ந்து பார். இதையும் கடந்து போகலாம் என முயற்சி செய். எதுவும் கடந்து போகத்தான் வேண்டும் என்ற வாழ்வின் நியதியை நம்பு.''

ஸாலியாபுரம் நகரத்தில் கபூர் சேரைத் தெரியாதவர்கள் யாருமில்லை. கபூர் சேரின் வாழ்வைக் கண்டு வியந்து நிற்பவர்களே அதிகம். கபூர் சேர் இப்போது ஒரு கல்லூரியின் முதல்வர். பல வியாபாரங்களின் முதலாளி. பல கோடி சொத்துக்களின் உரிமையாளர். பல சமூக நிறுவனங்களில் அங்கத்தவர். ஒரு நல்ல மனிதர். ஆனால், இதே கபூர் சேர் பிறக்கும் போதே அநாதை. வீதியில் வீசப்பட்ட குழந்தை. வறுமையின் உச்சத்தைத் தொட்டுப் பார்த்து வளர்ந்தவர். பரீட்சைகளில் பல தோல்விகளை சந்தித்தவர். சொந்தமாய் படித்து உழைத்து முன்னேறிய பின்பும் விபத்து ஒன்றில் சிக்கி ஊனமுற்று மரணத்தை தொட்டுப் பார்த்து திரும்பியவர். ஆனால் இப்போது பலருக்கு முன்மாதிரியாய் இருக்கும் ஒரு பெரும் வெற்றியாளர்.

ஒருநாள் ஸாலியா புரத்தில் பெரும் விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டிருந்த கபூர் சேர் வாழ்க்கையின் யதார்த்தங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர் ''வாழ்க்கை என்பது ஒரு சக்கரத்தைப் போன்றதாகும். அந்தச் சக்கரத்தின் ஒரு பகுதியில் இன்பமும் மற்றொரு பகுதியில் துன்பமும் இருக்கிறது. எனவே வாழ்க்கைச் சக்கரம் சுழலும்போது இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயல்பானது. இவையிரண்டையும் வாழ்க்கையில் சமமாகப் பேணிக்கொள்ள பழகிக் கொள்பவரே வாழ்வில் வெற்றி பெறுகிறார்'' என்றார். அப்போது அங்கிருந்த ஒரு மாணவன் ''சேர்! நாங்கள் இன்பம் வந்து விட்டால் மகிழ்ச்சியில் மிதக்கிறோம். துன்பம் நேர்ந்து விட்டால் கவலையில் மூழ்கி தத்தளிக்கிறோம். ஆனால், நீங்கள் இன்பத்தில் மகிழ்ச்சியோ, துன்பத்தில் சோர்வோ அடைவதில்லை. மாறாக, இரண்டையும் சமமாக எடுத்துக் கொள்கிறீர்கள். அது எப்படி?'' என்று கேட்டான்.

அதற்கு கபூர் சேர் ''நான் அந்தப் பண்பை வித்தியாசமான ஓர் ஆசானிடமிருந்து கற்றுக் கொண்டேன். ஆம் நான் அதனை கழுதையிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன். நான் சிறுவயதில் இருக்கும் போது நம்மூரில் துணி துவைக்கும் சலவைத் தொழிலாளியின் கழுதையை கூர்ந்து கவனித்தேன். காலையில் அது அழுக்கு துணிகளை சுமந்து செல்லும். மாலையில் அது சுத்தமான துணிகளை சுமந்து வரும். ஆனால் அந்தக் கழுதை காலையில் அழுக்குத் துணிகளை சுமக்கும்போது வருத்தப்படுவதும் இல்லை, மாலையில் சுத்தமான துணிகளை சுமந்து வரும்போது மகிழ்ச்சியடைவதும் இல்லை. தனது பணியை சரியாகச் செய்கிறது. அதைத்தான் கற்றுக் கொண்டேன். அதேபோல்தான் நாமும் இருக்க வேண்டும். வாழ்வில் துன்பம் வரும்போது பொறுமையுடனும் இன்பம் வரும்போது இறைவனுக்கு நன்றி செலுத்தி நிதானத்துடனும் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுதான். நமக்கென்று உள்ளதை யாராலும் தடுத்து விட முடியாதே'' என்றார். இதனைக் கேட்ட அனைவரும் 'இனிமேல் இன்பத்திலும் துன்பத்திலும் நிதானத்தை இழந்து விடுவதில்லை' என உறுதி கொண்டனர்.

மேலும் அந்த விழாவுக்கு வந்தவர்களில் தீராத நோயாளி, செல்வந்தன், உழைத்து ஓடாய் தேய்ந்தவன், பரீட்சையில் தோற்ற மாணவர்கள், வியாபாரத்தில் நஷ்டமடைந்தவர் என்று பலதரப்பட்டவர்களும் வந்திருந்தனர். எல்லோரும் கபூர் சேரின் முன்னே வந்து ''சேர்... எங்களைப் போலவே நீங்களும் வாழ்வில் பல தடைகளையும் சோதனைகளையும் சந்தித்தவர்தான். ஆனால், எங்களால் இலகுவாக அதிலிருந்து வெளிவர முடியவில்லையே! உங்களால் எப்படி முடிந்தது? உங்கள் வெற்றியின் மந்திரம்தான் என்ன?'' என அழுது கொண்டே கேட்டனர். அப்போது கபூர் சேர் ''நண்பர்களே! என் வெற்றியின் தாரக மந்திரம் ஒற்றை வசனம்தான். நீங்களும் கண்களை மூடி நம்பிக்கையோடு அந்த வார்த்தையை சொல்லுங்கள். உங்கள் வாழ்வும் மாறும். கவலைகள் தீரும். 'இன்ஷா அல்லாஹ் இதுவும் கடந்து போகும்' எனச் சொல்லுங்கள். என்றார். கூட்டமே அமைதியடைந்தது. அனைவரும் மனதுக்குள் அந்த வாசகத்தையே கூறினர்.

''இன்ஷா அல்லாஹ் இதுவும் கடந்து போகும்''

பரீட்சையில் தோற்றுப் போன இளைஞனுக்கு தன்னம்பிக்கையைத் தந்தது அந்த வாசகம். 'எனது தோல்வி நிலையானது அல்ல. என்னுடைய நிலை கண்டிப்பாக மாறி விடும்' என்ற நம்பிக்கை வந்து விட்டது. 'நீண்ட கால நோய் கண்டிப்பாகத் எனக்கு தீர்ந்து விடும்' என நினைத்தார் நோயாளி. 'இந்தப் பணம் தொடர்ந்து என்னுடன் இருக்காது. கடந்து போய் விடும்' என்பதைப் புரிந்த செல்வந்தர் இறைபாதையில் செலவழிக்க வேண்டும் என முடிவெடுத்தார். இப்படி இன்பமும் துன்பமும் நிலையானதல்ல. செல்வமும் வறுமையும் நிலையானதல்ல. வெற்றியும் தோல்வியும் நிலையானதல்ல. எல்லாமே கடந்து போகும் என உணர்ந்து நம்பிக்கையுடன் இருந்தனர் அனைவரும்.

கபூர் சேர் பேச்சைத் தொடர்ந்தார். ''கஷ்டங்கள் யாவும் படையென வந்தாலும் துன்பங்கள் யாவும் விடாது துரத்தினாலும் 'இதுவும் கடந்து போகும்' என்று நினையுங்கள்; வாழ்க்கை மாறும். தாய்மையின் கண்ணீரில்தான் நாம் உயிர் பெற்றோம்; தந்தையின் இரத்தத்தில்தான் நாம் அழகு கொண்டோம். அவர் அவர் கஷ்டங்களை நினைத்திருந்தால் நாம் பிறந்திருப்போமா? கடலாய் இருந்தாலும் எதிர்த்து நிற்க வேண்டும். அப்பொழுதுதான் அலையின் வேகத்தை பார்க்க முடியும். எதிர் நீச்சல் போட முடியும். இதுவும் எதுவும் கடந்து போகும் என நினையுங்கள். கஷ்டங்கள் கடந்து போகும், சந்தோஷம் கடந்து போகும் துயரம் கடந்து போகும் பயம் கடந்து போகும், சங்கடம் கடந்து போகும்; எல்லாமே கடந்து போகும். வாய்ப்பிழந்ததற்காக வருந்தாதீர்கள். இக்கணம் வாய் பிழந்து போனாலும் என்றாவது ஒரு நாள் நம் முன்னேற்றம் மற்றவர்களை வாய்ப்பிளக்கச் செய்யும். அதுவரை பொறுத்திருங்கள். முயற்சியோடு போராடுங்கள். தவங்களுக்குப் பிறகுதான் வரம் கிடைக்கிறது. போராட்டத்துக்குப் பிறகுதானே வெற்றி கிடைக்கிறது. மண்ணுக்குள் புதையுண்ட கரிதான் வைரமாகிறது... விதைக்குள் அடைபட்ட வித்து தான் விருட்சமாகிறது... எனவே, எந்தச் சூழ்நிலையும் நிரந்தரமானது அல்ல... எதுவும் மறைந்து போகும்... எதுவும் கடந்து போகும்.

'வலல் ஆகிரது கைருன் லக மினல் ஊலா. வலசவ்ப யுஃதீக ரப்புக பதர்ழா' தற்கால நிலைமை மாறும். எதிர்கால நிலைமை சிறக்கும். மக்கா வாழ்வின் சோதனை கண்டு தளர்ந்து விடாதீர்கள். இதுவும் கடந்து போகும். வெற்றிகள் வரும். இருள்களுக்குப் பின் ஒளிஇருக்கிறது என அல்லாஹ் நபிகளாருக்கு ஆறுதல் கூறினானே. அதுதான் வெற்றியின் சூத்திரம்'' என்றார்.

கேட்டுக் கொண்டிருந்த அனைவருக்கும் மனதில் தன்னம்பிக்கை ஒளி பாய்ந்தது. 'எல்லாமே கடந்து போகுமே. அப்படியானால் இன்பத்தில் குதிக்கவும் தேவையில்லை. துன்பத்தில் தளரவும் தேவையில்லை' என்ற வாழ்வின் யதார்த்தம் புரிந்தது. விழா முடிந்து கூட்டமும் கலைந்தது.

சிறிது நேரத்தின் பின் சாலியாபுர படைத்தளபதி கபூர் சேரை சந்திக்க வந்தார். அவரிடம் ''சேர். நான் எனக்காக ஒரு மோதிரம் செய்யப் போகிறேன். இக்கட்டான கட்டத்தில் படித்தால் எனக்கு உதவக் கூடிய ஒரு சுருக்கமான வாசகத்தை அதில் பொறிக்க விரும்புகிறேன். நீங்கள் தான் அதனை சொல்ல வேண்டும்'' என்றார். உடனே கபூர் சேர் ''சரி. என்னிடம் அவ்வாறான வாசகம் பொறிக்கப்பட்ட ஒரு மோதிரம் உண்டு. அதை நான் உங்களுக்கு அன்பளிப்பாக தருகிறேன்.

38 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

**பாடம் - 29**

# கணினியின் வகைகள்

கணினியானது சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது. கணினி வைத்தியரின் கையில் இருக்கின்றபோது ஒரு பணியையும், பொறியியலாளரின் கையில் இருக்கின்றபோது வேறு ஒரு பணியையும் ஆற்றும் வல்லமை கொண்டது.

கணினி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரே பௌதிக வடிவத்தைக் கொண்டிருப்பதில்லை. ஒரு சமயம் கைத்தொலைபேசியாக, இன்னும் சில சமயம் எரிபொருள் நிரப்பும் இயந்திரமாக வேறொரு சந்தர்ப்பத்தில் பணப் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் ATM, CMD இயந்திரங்களாக காட்சியளிக்கும்.

எனவே, கணினியானது அதன் அளவையும் தொழில்நுட்பத்தினையும் அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றது.


**கணினி**
- அளவிற்கேற்ப வகைப்படுத்தல்
- தொழில்நுட்பத்திற்கேற்ப வகைப்படுத்தல்

கணினி இவ்வாறு வகைப்படுத்தப்படுவதற்கான காரணிகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்:

- ⇨ நினைவகம் மற்றும் தேக்கத்தின் கொள்ளளவுத் திறன்
- ⇨ கணினியின் செயற்பாட்டு வேகம் (Processing speed)
- ⇨ உள்ளீட்டு, வெளியீட்டுச் சாதனங்களின் திறனளவு
- ⇨ கையாளும் தரவுப் போக்குவரத்தின் வேகமும் அளவும்
- ⇨ பயன்பாடுகளின் எல்லை

**கணினியின் வகைகள்**
**(அளவிற்கு ஏற்ப வகைப்படுத்தல்)**

**1. மீக்கணினிகள் (Super Computers)**




அதியுயர் ஆற்றல் மிக்க இக்கணினிகள் விஞ்ஞான, பொறியியல் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. நாசா விண்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக் கூடிய ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பணிகளை மேற்கொள்ளும் கணினி அபார ஆற்றல் கொண்டதாக இருக்க வேண்டும். எனவே, இது போன்ற மிகப் பிரமாண்டமான பணிகளை செய்யும் உலக நிறுவனங்களும் இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளுக்காக உலக வல்லரசுகளும் இக்கணினி களைப் பயன்படுத்துகின்றன.

**2. பெருமுகக் கணினிகள் (Mainframe Computers)**



பெருமுகக் கணினிகள் முதன்மைக் கணினிகள் எனவும் அழைக்கப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் முதன்மைக் கணினிகள் தனியான ஒரு கட்டிடத்தின் அளவிற்கு அல்லது ஒரு விசாலமான அறையின் அளவிற்கு பெரியதாக காணப்பட்டது. ஆனால், இன்று அதன் அளவில் சிறியதாகியுள்ள அதேநேரம் பெரும்பரப்பு வலையமைப்பில் (Wide Area Network -WAN) தலைமையாக செயல்படுவதற்காகத் தயாரிக்கப்படுகின்றது.

பெருமுகக் கணினிகளின் நினைவகமும் தேக்கக் கொள்ளளவும் அளப்பரியவை. பல நூற்றுக்கணக்கான பயனர்களின் வினவல் (Quary) களை ஒரே நேரத்தில் ஏற்றுக் கையாளும் திறன் வாய்ந்தனவாக இவை காணப்படுகின்றன.

பெருமுகக் கணினிகள் பல முனையங்களைக் (Terminals) கொண்டுள்ளன. இவற்றின் மூலம் தரவுகளை உள்ளீடு செய்து கொள்ள முடியும்.

வங்கிகள் பயன்படுத்தும் ATM, CDM இயந்திரங்களை நினைவிற் கொள்ளுங்கள். இவை முனையங்களாக பயன்படுகின்றன. நாம் பணத்தை அம் முனையத்திலிருந்து வைப்பு செய்கின்றோம். அத்தகவல்கள் பெருமுகக் கணினியில் சேமிக்கப்படுகின்றன. நாட்டின் வேறொரு மூலையில் இருக்கும் ஒருவர் அப்பணத்தினை இன்னொரு முனையத்தின் துணையுடன் பெற்றுக் கொள்கின்றார்.

**எனவே, பெருமுகக் கணினிகளின் பயன்பாடுகளை பின்வருமாறு பட்டியலிட முடியும்:**

1. வலையமைப்பில் தலைமைக் கணினியாகச் செயற்படல்
2. முனையங்களிலிருந்து (Terminals) வரும் உள்ளீடுகளைப் பெற்றுச் சேமித்தல்
3. தரவுகளை செயற்படுத்தி ஒழுங்கமைத்தல்
4. வினவல்களுக்கு ஏற்ப தகவல்களை முனையங்களுக்கு (Terminals) அனுப்புதல்
5. வலையமைப்பின் சீரான செயற்பாட்டை மேம்படுத்துதல்.

பெருமுகக் கணினியானது தரவுகளை சேமித்து, ஒழுங்கமைத்து, தகவல்களை மீள வழங்கி நிர்வகிக்கும் பணியை கச்சிதமாக செய்யும் ஆற்றல் மிகுந்த கணினியாகும்.

**3. நுண் கணினிகள் (Mainframe Computers)**



சாதாரணமாக நாம் பயன்படுத்தும் கணினிகள் நுண் கணினிகள் எனப்படுகின்றன. இவை தனியாள் கணினி (Personal Computers), சிறு கணினிகள் (Mini Computers) எனவும் அழைக்கப்படும்.

இக்கணினிகள் கொள்திறன், நினைவகம், கதி என்பவற்றில் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அதே நேரம் குறைந்த மின்னை நுகர்கின்றன. நுண்கணினி பல்வேறு வடிவங்களில் சந்தையில் கிடைக்கின்றன. அவற்றில் சில கீழே காட்டப்பட்டுள்ளன:

மடிக்கணினி (Laptop)

கையடக்க கணினி (Palmtop)

சட்டைப்பைக் கணினி

**கணினியின் வகைகள் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப வகைப்படுத்தல்:**

1. ஒத்திசைக் கணினிகள் ( Analog Computers)
2. இலக்கமுறைக் கணினிகள் (Digital Computers)
3. கலப்பினக் கணினிகள் (Hybrid Computers)

கணினியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் பற்றியும் இக்கணினிகளின் சிறப்பம்சங்கள் பற்றியும் அவற்றுக்கான உதாரணங்களையும் அடுத்தடுத்த இதழ்களில் நாம் கற்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## கற்றுக்கொள்

பூக்களைப் பார்த்து
சிரிப்பை கற்றுக்கொள்
நாய்களைப் பார்த்து
நன்றியைக் கற்றுக்கொள்
எறும்புகளைப் பார்த்து
உழைப்பைக் கற்றுக்கொள்
காகங்களைப் பார்த்து
ஒற்றுமையைக் கற்றுக்கொள்
அலைகளைப் பார்த்து
முயற்சியைக் கற்றுக்கொள்
கொக்குகளைப் பார்த்து
பொறுமையைக் கற்றுக்கொள்
தேனீக்களைப் பார்த்து
சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்

**வலியுல்லாஹ் அகீல் முஹம்மட்**
**க/எனசல் கொல்ல ம.க.**
**தெல்தோட்டை**





## ஒரு துளி கண்ணீர்

ஒரு துளி கண்ணீர்
தந்தையே உம்முடன்
எவ்வளவு கோபம்
கொண்டாலும் - உம் மீது
உள்ள பாசம் ஒரு துளிகூட
குறையாது - ஆனால்
ஒவ்வொரு நாளும் நொடியும்
பாசம் கூடும்...
அது போலவேதான்
உம்முடைய கண்ணிலிருந்து
வடியும் ஒரு துளி
கண்ணீரைக் கூட என்னால்
தாங்க முடியாது தந்தையே!
உம் கண்ணிலிருந்து விழும்
கண்ணீர்த் துளி என்
இதயத்திலிருந்து விழும் - ஒரு
துளி இரத்தத்திற்கு சமன்
என் தந்தையே!

**எப். நுப்லா**
**பெலந்த மு.வி.**


## உனக்காய் தோழா...



சோதனைகள் எல்லாம்
உனக்கான
சாதனைகள் தோழா...
தளர்ந்திடாதே தோழா...
குனிந்தெழு
புகழின் அடிமை நீயல்ல
தோழா...
பெருமைகள் உன்னை
ஆளக்கூடாது தோழா...
பொய்கள் உன்னை அலங்கரிக்க
தேவையில்லை தோழா...
நீ அடிமையாக,
உன்னை ஆள,
உன்னை அலங்கரிக்க,
அல்குர்ஆன் ஒன்றே போதும்
தோழா...
நீ அதன் அச்சில் வார்த்தெடுக்கப்பட
இன்றே புறப்படு தோழா...

**எம்.எஸ்.எம். சப்ரின்**
**பு/கனமூலை மு.ம.வி.**
**மதுரங்குளி**

## பேசும் கவிதை - இல 40



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2018 ஒக்டோபர் 30**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



## முதலிடம் பெற்ற கவிதை

### வெட்டாதீர்கள்

போஷாக்கு மிக்க
உணவு வழங்கிட
போக்கிடம் அற்றவர்க்கு
இல்லிடம் அமைத்திட
வெளியிடும் காற்றை
தூய்மை செய்திட
விந்தை மிக்க
மரங்கள் வேண்டும்

✍ எப். மிர்பத் ஸுஹா
பொ/அல் அஸ்ஹர் மு.ம.வி.
கல்லளை, பொலன்னறுவை

### உபகாரம்

அல்லாஹ் அளித்த
அருட்கொடைகளை
அள்ளி நானும்
வழங்கிட்டேன்!
அன்பே இல்லா
உள்ளத்தால்
அடியோடு எனையும்
அறுத்திட்டாயே!

✍ எம்.ஐ. உமாரா
ஹில் கன்றி ச.பா.
மடவளை

### அன்பான தாயும்

நான்தான்...!
அழகான சேயும்
நீர்தான்...!
உபகாரம் ஊட்டுவதும்
நான்தான்...!
அதை மனமார ஏற்பதும்
நீர்தான்...!

✍ சேகு இஸ்மாயில் எப். தஸ்னா
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.
செம்மண்ணோடை

### நன்றி மறந்தவனே

களைப்பாற இடம் தந்து
சீவாசிக்க வளி தந்து
விளையாட கிளை தந்து
நிழலாற நிழல் தந்து
பசி தீர பழம் தந்து
நீ ரசித்திட பூக்கள் தந்து
உனை நேசித்த தோழனை
அழித்திட கொஞ்சமும்
அஞ்சவில்லையே
நன்றி மறந்தவனே!

✍ சுமையா இப்றாஹீம்
இஸ்லாஹிய்யா வளாகம்

### இயற்கை

இயற்கையோடு இணைந்து
வாழாமல்
செயற்கையை தேடிய மனிதன்
அடைந்தது பெரும் நாசமே
உடைந்தது அவன் பேராசையே...

✍ எம்.ஜே.எப். ஜெஸ்லா
அல் ஹிக்மா மு.ம.வி.
தித்தவெல்கால

### தம் நலம்

தம் நலத்திற்காக
தறித்தனர் மரங்களை
தரணி பற்றி
துளியளவும் அக்கறை
இன்றியே...!

✍ எம்.எஸ்.எப். ஸாஹிமா
தர்கா நகர்

### மரங்கள் தேவை

மெசின் எடுத்து மரம் வெட்டி
அரசுக்கு களவாக
மரம் விற்று செலவு செய்து
உயிர் வாழும் மானிடரே
வெட்ட வேண்டாம்
மரங்களை இனியும்

✍ எம்.எஸ்.எம்.எச். டீன்
மஹவத்த, மாவனல்லை

### வளமான நாடு

சூழலை பாதுகாக்க மரம்
வளர்ப்போம்...
எமது நாட்டை ஒரு
வளம் மிக்க
நாடாக்குவோம்...

✍ ஸன்பர் ஸஹீல்
அல் ஹிக்மா மு.ம.வி.
தித்தவல்கால.

### சுவாசிக்க...

நீங்கள் உயிர் வாழ
நாங்கள்
சுவாசிக்கின்றோம்
எங்களை அழித்து
உங்கள் மூச்சினை
நிறுத்தி விடாதீர்...!

✍ ஆர்.எம். அஸ்ரித் முஹமட்
பொ/அல் அஸ்ஹர் ம.வி.
கல்லளை, பொலன்னறுவை

### காடழிப்பு

காலங்கள் மாறிப் போனது
காடுகள் வீடுகளானது
மழையின் விலாசம்
மறைந்து போனது
தாகத்தால் நாவு வரண்டு துடிக்குது
வெயில் உலகிற்குள் குடியேறி விட்டது
பசியால் உடலும் வரண்டு போனது
பிணத்தால் உலகம்
நிறைந்து வழியுது
மனித கவனயீனத்தால்
ஏற்பட்ட விளைவிது

✍ எம்.என்.பீ. நதா
கொச்சிக்கடை

### செழிப்பான வளம்

இனிமையான காற்றைத்
தந்து
அழகான மழையைத்
தந்து
சுகமான நிழலைத்
தந்து
எம்மைக் காக்கும் மரங்களே...!!
நாமும் உங்களை பாதுகாத்து
எமது செழிப்பான வளத்தை
நேர்த்தியாக்க முனைவோம்...

✍ எம்.எப். நிப்ஸா
பொ/புதூர் மு.க.வி.
காலிங்க எல, கதுருவெல

### அமைதி தேடிய உலகம்

வெட்டும் மரம் - இது
நீ வளர்த்ததல்ல
வேலை செய்யும் உன்
உடல் - அது தனக்கே
வினையாகுமென்பதை
மறந்து விட்டதோ...
அழிக்கப்படும் காடுகள்
தரைமட்டமாகட்டும்...
அழிக்கும் கைகள்
செல்வந்தனாகட்டும்...
அழிவை தேடும் உலகம்
அமைதியாகட்டும்...

✍ மபாஷா
இஸ்லாஹிய்யா வளாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2032ஆம் ஆண்டு ஒலிம்பிக்கை



# நடத்த இந்தியா, இந்தோனேஷியா போட்டி

2032 ஒலிம்பிக் மற்றும் பரா ஒலிம்பிக் போட்டிகளை நடத்த போட்டி போடுவதற்கு இந்தோனேஷியா திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜோகோ விடோடோ அறிவித்துள்ளார். 2032 ஒலிம்பிக்கை நடத்த இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் சீனா ஆகிய நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 2020 ஒலிம்பிக் மற்றும் பரா ஒலிம்பிக் போட்டிகளை ஜப்பான் தனது தலைநகரான டோக்கியோவில் நடத்துகிறது. 2024 இல் பிரான்ஸ் தனது தலைநகர் பாரிஸிலும் 2028 ஒலிம்பிக்கை அமெரிக்கா, லொஸ் ஏஞ்சல்ஸிலும் நடத்தவுள்ளது. இந்தியாவும் இந்தோனேஷியாவும் இதற்கு முன்னதாக ஒலிம்பிக் போட்டிகளை நடத்தியதே கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

# 14 ஆவது ஆசிய கிரிக்கெட் போட்டி

ASIA CUP
UAE 2018

ஆசியாவில் கிரிக்கெட் விளையாடும் நாடுகளுக்கு இடையில் நல்லுறவை விருத்தி செய்யும் நோக்கோடு ஆசிய கிரிக்கெட் ஒன்றியம் (ACC) 1983 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஆசியக் கிரிக்கெட் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் பின்னர் 1984 ஆம் ஆண்டு முதல் தடவையாக நடைபெற்ற ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்த ஆண்டு அதன் 14 ஆவது அத்தியாயத்தை அடைந்திருக்கின்றது. கடந்த மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் விழாக் கோலம் நடைபெற்றது. இத்தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், ஹொங்கொங் என ஆசியாவின் திறமை மிக்க கிரிக்கெட் அணிகள் பங்குபற்றின.







# வலைப்பந்து சப்பியன்




சிங்கப்பூரின் OCBC அரங்கில் கடந்த மாதம் நடைபெற்று முடிந்திருக்கும் 11 ஆவது ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் சிங்கப்பூர் வலைப்பந்து அணியினை 69-50 என்கிற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்து இலங்கை வலைப்பந்து அணி ஆசிய வலைப்பந்து தொடரின் சம்பியனாக 5ஆவது முறையாக நாமம் சூடியுள்ளது.

# 19 ஆவது ஆசிய விளையாட்டு சீனாவில்

19th Asian Games
Hangzhou 2022

19 ஆவது ஆசிய விளையாட்டு போட்டி 2022 ஆம் ஆண்டு சீனாவின் ஹாங்ஜோவ் நகரில் நடைபெறவுள்ளது. இதன்மூலம் 3 ஆவது முறையாக சீனாவில் ஆசிய விளையாட்டு விழா நடைபெறவுள்ளது. இதற்கு முன் 1990 (பீஜிங்), 2010 இல் (குவான்சு) ஆகிய இடங்களில் இப்போட்டிகள் நடத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்புரில் கடந்த மாதம் நிறைவுக்கு வந்த 11 ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி ஐந்தாவது தடவையாகவும் சம்பியன் பட்டத்தை வென்று அசத்தியது. இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம். இவரின் உயரம் ஆறு அடி பத்து அங்குலம். இவரின் மீள் வருகை இலங்கை வலைப்பந்தாட்டத்தில் மீண்டும் ஒரு முறை ஆசிய கிண்ணத்தை பெற்றுக் கொடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்ஜினி சிவலிங்கம், ஆறு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவதாக பிறந்தவர். இவரது குடும்பத்தில் அநேகர் உயரமானவர்கள்தான். அதீத உயரம் காரணமாக இவரது சிறுவயது வாழ்க்கை மிகவும் கசப்பான அனுபவங்களை அவருக்கு கொடுத்து இருக்கின்றது. பெரும்பாலும் இவர் வேடிக்கைக்கு உரிய பொருளாகவே ஏனையோரால் பார்க்கப்பட்டார். கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் இருந்த போது இவரின் உயரம் ஆறு அடி இரண்டு அங்குலம்

# உயரத்தால் உயரம் தொட்ட

# தர்ஜினி சிவலிங்கம்



ஆகும். பாடசாலையிலேயே இவர்தான் உயரமானவர். உயரம் காரணமாக ஏனைய மாணவர்களால் நையாண்டி செய்யப்பட்டார். பாடசாலையில் பல விடயங்களில் புறக்கணிப்புக்களுக்கும் உள்ளானார்.

இவர் பாடசாலை விடுதியில் தங்கி இருந்து படித்தார். காரணம் பஸ்ஸில் பயணம் செய்கின்றமை கூட இவருக்கு மிகவும் சிரமமாக இருந்தது. பஸ் கூரை இவரின் தலையை பதம் பார்த்து விடும். கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் தர்ஜினி சிவலிங்கம் பயின்றார். தமிழ் துறையில் விரிவுரையாளராக வர வேண்டும் என்பது இவரின் இலட்சியமாக இருந்தது. ஆயினும், இங்குதான் இவரின் வலைப்பந்தாட்ட திறமை இனங்காணப்பட்டது. தனக்கு இறைவனால் வழங்கப்பட்டுள்ள உடல் ரீதியான பாக்கியத்தை சாதிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். பல்கலைக்கழகத்தில் அதற்கான பயிற்சிகளை தொடராக செய்து வந்தார். உள்ளத்தில் எப்போதும் சாதிக்க வேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் ஆழமாக இவரிடம் இருந்தது. இதுவே இவரை இன்று உலக நட்சத்திரமாக கொண்டு வந்திருக்கிறது.

அவரது திறமைகளைக் கண்டு வியந்துபோன அதிகாரிகள் அவரை கொழும்புக்கு அழைத்து விசேட பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்தனர். இவரின் கசப்பான அனுபவங்களுக்கு சிறுவயது முதலே காரணமாகி இருந்து வந்த அதீத உயரம் தர்ஜினியை இன்று உயரத்துக்கு கொண்டு சென்றுள்ளது மாத்திரமல்லாது, இலங்கை வலைப்பந்தாட்ட அணியையும் உலகறிய செய்தது என்றால் மிகையாகாது. தர்ஜினி சிவலிங்கம் இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ஆனார்.

ஏனைய அணியினருக்கு இவர் சிம்ம சொப்பனம் ஆனார். இவரின் கைகளுக்கு பந்து கிடைத்தால் போதும், 90 சதவீதம் தவறாமல் கோல் போட்டு விடுவார். 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஆசிய வலைப்பந்து சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொடுக்க பெரும் தூணாக இருந்த தர்ஜினி, 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஆசியாவின் சிறந்த கோல்போடும் வீராங்கனையாகவும் (ஷூட்டர்) தெரிவானார். அதனைத் தொடர்ந்து தேசிய வலைப்பந்து அணியின் இணை தலைவியாக செயற்பட்ட தர்ஜினி, முன்னதாக 4 தடவைகள் ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை அணியைப் பிரதிநிதித்து வப்படுத்தியும் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் தினம்
# ஒக்டோபர் - 24



ஐக்கிய நாடுகள் தினம் ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. **U.N.O. (United Nations Organisation)** 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு முதல் ஐ.நா. தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஐ.நா.வின் நோக்கங்களையும் சாதனைகளையும் உலகெங்கும் எடுத்துக் கூறுவது இந்த தினத்தின் முக்கிய நோக்கமாகும். ஐ.நா. சபையில் இலங்கை 1951 ஆம் ஆண்டு இணைந்து கொண்டது. ஐ.நா.வில் ஏறக்குறைய உலகின் அனைத்து நாடுகளுமே அதாவது 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஐ.நா.வின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

- உலக நாடுகளில் அமைதியை நிலைநிறுத்துவது
- நாடுகளிடையே நல்லுறவை வளர்ப்பது
- ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும், பசி, பிணி, கல்லாமை ஆகியவற்றை ஒழிக்கவும் கூட்டாக முயற்சி செய்தல்
- இந்தக் குறிக்கோள்களை எய்துவதில் உலக நாடுகளுக்கு உதவும் பொருட்டு ஒரு பொது அரங்கமாக செயல்படுதல்.

31 ஆம் பக்கத் தொடர்...

ஆனால், அதை நீங்கள் இப்போது படிக்க வேண்டாம். மோதிரத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லாமே முடிந்து விட்டது வேறு வழியேயில்லை எனும் ஒரு சந்தர்ப்பத்தில் இதைத் திறந்து பாருங்கள்'' என்றார். தளபதியும் அதற்கு உடன்பட்டு நன்றி கூறி புறப்பட்டார்.

ஒருநாள் தளபதி ஒரு படையெடுப்பில் தோற்று தப்பித்து தன் படையினருடன் ஓடினார். பின்னால் எதிரிப் படையினர் துரத்தி வந்து கொண்டிருந்தனர். அப்போது பாதையும் முடிவுற்றது. வேறு வழியற்று கடலுக்கருகில் வந்து விட்டனர். முன்னால் கடல் பின்னால் எதிரிகள். அப்போது தளபதிக்கு மோதிரத்தின் நினைவு வந்தது. அவர் மோதிரத்தை எடுத்துப் படித்தார். ''இன்ஷா அல்லாஹ் இதுவும் கடந்து போகும்'' என்ற வாசகம் இருந்தது. ''என்ன... இதுவும் கடந்து போகுமா?'' சற்று நேரம் நிதானமாக சிந்தித்தார். உத்வேகத்துடன் தன் படையினரைப் பார்த்து கத்தினார். ''நாம் துணிந்தால் இதுவும் கடந்து போகும். தயாராகுங்கள்.'' மீண்டும் படைகளைத் திரட்டிக் கொண்டு தன்னம்பிக்கையுடன் போராடி வெற்றி பெற்றார். பின்னர் வெற்றியோடு மகிழ்ச்சியோடு தன் வெற்றியை பெருமையாகக் கூற தனக்கு மோதிரம் அன்பளித்த கபூர் சேரிடம் விரைந்து வந்தார். அப்போது கபூர் சேர் ''இதுவும் கடந்து போகும்'' என்றார். உடனே தளபதி ''என்ன... இதுவும் கடந்து போகுமா?'' என ஆச்சரியத்துடன் வினவினார். அதற்கு கபூர் சேர் ''இந்த வாசகம் எந்தத் தருணத்திற்கும் ஏற்றது. வெற்றியும் நிரந்தரமல்ல'' என்றார். வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்த தளபதி நன்றி கூறி விடைபெற்றார்.

அப்போது கல்லூரியில் இருந்த கபூர் சேர் தன் மாணவர்களிடம் தளபதிக்கு நடந்ததை விளக்கினார். இதுவும் கடந்து போகும் என்ற வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துரைத்தார். ''இதுவும் கடந்து போகும் என வாழ்ந்து பார். இதையும் கடந்து போகலாம் என முயற்சி செய். எதுவும் கடந்து போகத்தான் வேண்டும் என்ற வாழ்வின் நியதியை நம்பு. இன்பமும் துன்பமும் சமமாக இருக்கும். வாழ்க்கை ஜெயிக்கும்'' என்றார். மாணவர்களும் வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பாடத்தை கவனிக்கத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலக உணவு தினம் ஒக்டோபர் - 16

உலக உணவு தினம் (World Food Day) ஆண்டு தோறும் ஒக்டோபர் 16 ஆம் நாளன்று உலக நாடுகளில் கொண்டாடப்படுகிறது. 1945 ஆம் ஆண்டில் இதே நாளில் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதை நினைவுகூர ஐ.நா. இந்நாளைச் சிறப்பு நாளாக அறிவித்தது. உயிர் வாழ உணவு அவசியம். அனைவருக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை. இது மனித உரிமையும் கூட. இன்றைய நிலையில் பசியால் யாரும் வாடக் கூடாது, அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உலக உணவு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இன்று உலகில் 821 மில்லியன் மக்கள் பசியின் கொடுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக உணவு தாபனத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது.

## எண்ணங்களின் வண்ணங்கள் 31

### பாராட்டுக்குரியவர்கள்

எம்.ஐ.எப். ஸுஹா – கிரி/சுலைமானிய்யா மு.ம.வி.
எம்.ஆர்.எப். ரிஸ்லா – நிக/அபுக்காகம மு.ம.வி.
எம்.ஆர்.எப். றிப்கா – ஜாயா நகர், குச்சவெளி
ஆர். நஸீலா – காசிம் நகர், குச்சவெளி
எம்.ஜே.எப். ஹிபா – காசிம் நகர், குச்சவெளி
டீ.சீ.எப். கனான் – காசிம் நகர், குச்சவெளி
எம்.ஆர்.எம். ஹம்தி – அல் அமீர் வி., சம்மாந்துறை
எம்.எஸ். அஸ்மா – புத்தளம் பாத்திமா பெ.ம.வி.
எம்.எஸ்.எப். சல்ஹானா – பு/கணமூலை மு.ம.வி.
எம்.இஸட்.ஏ. சல்ஹான் – பு/கணமூலை மு.ம.வி.
எஸ். சாஜிதா – அ/ஜாயா ம.வி., கடுகஸியாவ
ஏ.எப். அம்னா – பு/கணமூலை மு.ம.வி.
ஐ. பஹ்மா – களு/நளீம் ஹாஜியார் ம.க.
எம்.என். நதா – பு/பாத்திமா பெ.ம.வி.
எம்.ஏ.எப். ஸுஹா – அந்நூர் ஆ.பா., வெலம்பொட
எம்.ஏ. ஹிஜ்னா விதாதா – அலிகார் ம.வி., கள்ளளிய
ஏ. ஆஇஷா – மட்/தியாவட்டவான் அறபா வி.
எம்.ஏ.எப். அம்ஜனா – தித்தவல்கால, நிகதழுபொத
எம்.எஸ். ஸீனா தஸ்னீம் – அம்பகஸ்தன்ன மு.வி.
எச்.எம். ஹப்ஸா – அல் ஹிக்மா மு.ம.வி.
எம்.எஸ். ஸல்ஹா பேகம் – க/வெலம்பொட மு.ம.வி.
எம்.பீ. அபாப் – பு/பாத்திமா பெ.ம.வி.
ஆ.எப். அகீலா – நிக/பண்ணவ மு.ம.வி.
எம்.எஸ். சமீமா – க/அக்குரணை முஸ்லிம் பெ.ம.வி.
எஸ்.எப். ஸபா – குளி/தொரகொடுவ மு.க.வி.
எம்.ஏ. பாதிமா பீபீ – க/வெலம்பொட மு.ம.வி.
எம்.என். ஹனீப் ஹஸன் – மூதூர் – 05
பியாஸ் சிப்ரிஜ் மஸாயா – அக்/ஆயிஸா மு.ம.க.
எம்.என். முஆத் – அல் பலாஹ் ம.வி., கொச்சிக்கடை
எம்.ஐ.எப். ஹப்ஸா – அ/கல்லஞ்சியாக அரபா மு.வி.
எம்.ஆர். இமாத் அவ்னி – தி/மூதூர் ம.க., மூதூர் – 05
எச்.எம். சாதிர் – பொ/நூரானிய்யா எம்.பீ.எஸ்., பொலன்னறுவ
எப்.எஸ். தாஜுதீன் – க/உடபிடிய அல் ஹுஸ்னா மு.ம.வி.
எப்.எச். ஹுமைத் – க/உடபிடிய அல் ஹுஸ்னா மு.ம.வி.
ரிஹானா – பஹலகம – 02, மஹஎலகமுவ, கெகிராவ
எம்.என்.எப். ஹப்ஸா – குளி/பண்டாரகொஸ்வத்த மு.ம.வி.
ஜே.எப். ரிஸ்னா – மட்/ஆயிஷா ம.ம.வி. வாழைச்சேனை – 05
ஏ.எச்.எப். அமானி – அ/மு.வி., கல்லஞ்சியகம
எப். அம்ரா – ஹுனுப்பிடிய ஸாஹிரா ம.வி., வத்தளை
எப்.ஆர்.எப். நுஸ்லா – பொ/அல் அஸ்ஹர் ம.வி., கல்லேல்ல
ஏ.பீ.எம். ஆகில் – க/ஜாமியுள் அஸ்ஹர் ம.க., உடதலவின்ன
ஏ.ஐ.எம். இஸ்ரத் – மே/எல்லாரமுள்ள ஸாஹிரா ம.வி.
எம்.கே. ஹிதா – அலியாவெடுனுவெவ மு.வி., கல்கமுவ
அப்ரா ஹதாயதுல்லா – அல் ஹிக்மா மு.ம.வி., நிகதழுபொத
எம்.கே.எப். ஹம்தா – க/அக்குரணை முஸ்லிம் பெ.ம.வி.
ஏ.ஜே.எப். இல்மா – மே/எல்லாரமுள்ள ஸாஹிரா ம.வி.
ஸமீஹா பாஹிம் – அல் அஸ்ஹர் ம.க., முருதலாவ
எம்.ஐ.எப். இல்மா – அல் பலாஹ்.ம.வி., கொச்சிக்கடை
நிஸ்லா நியாஸ் – அல் அஸ்ஹர் ம.க., முருதலாவ
இஸட்.ஜே. ஸாஜித் அஹமட் – அல் முர்ஷிட் ம.வி., சில்மியபுர
எம்.எப்.எப். ஸல்மா பாஹிம் – கா/ஸாஹிரா தே.பா., காலி
எச்.எப். சில்மா சப்ரி – பொ/கட்டுவான்வில மு.க.வி.
எம்.என்.எம். நிப்ராஸ் – கா/ஸாஹிரா தே.பா., காலி
இஸட்.ஐ. ஸாபி அஹமட் – அல் முர்ஷிட் ம.வி., சில்மியபுர
எம்.எஸ்.எப். சல்ஹானா – பு/கணமூலை மு.ம.வி.
ஸுமைஹா பாஹிம் – கா/ஸாஹிரா தே.பா., காலி
எஸ்.எப். சிபாறா – கமு/முஸ்லிம் ம.ம.வி., சம்மாந்துறை
ரிப்னா பிர்தேளஸ் – மாவனல்லை
எம்.என். அமானியா – க/பாத்திமா ம.வி.
எம்.ஐ.எம். இல்ஹாம் – அல் முர்ஷிட் ம.வி., சில்மியபுர
எம்.ஆர்.எம். பஹ்ஜித் – தி/அன்நூரிய்யா மு.ம.வி.

## எண்ணங்களின் வண்ணங்கள் - 34

**தலைப்பு: ஆசிரியர் தின வாழ்த்து மடல்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2018 ஒக்டோபர் 30**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்புகளுக்கு:
071 445 2120

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது - 2017


# ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2018

## விளக்கம், பயிற்சி


எம். ஷஹீல் காசிம் BEd. (Hons) | அல் ஹிக்மா கல்லூரி, கொழும்பு 12

## கணிதம் (பணம்)

கீழே கட்டத்தில் தரப்பட்டுள்ள பொருட்களின் விலைகளை இனங்கண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.





1. மாம்பழம் ஒன்றின் விலை யாது?
   ...............................................
2. அப்பிள் பழம் ஒன்றின் விலை யாது?
   ...............................................
3. தோடம்பழம் ஒன்றின் விலை யாது?
   ...............................................
4. 3 மாம்பழங்கள் 2 அப்பிள் பழங்கள் ஆகிய வற்றின் விலை யாது?
   ...............................................
5. ஒவ்வொரு பழத்தினதும் விலைகளின் கூட்டுத்தொகை யாது?
   ...............................................




6. ஒரு துடுப்பின் (BAT) விலை யாது?
   ...............................................
7. ஒரு பந்தின் விலை யாது? ....................
8. பூப்பந்தின் விலை யாது? ....................
9. பூப்பந்தினதும் பந்தினதும் மொத்த விலை யாது? ....................
10. ஒவ்வொன்றினதும் தனித்தனி விலைகளின் மொத்த கூட்டுத்தொகை யாது?
   ...............................................


பொருட்களின் விலைகளை இனங்கண்டு விடை தருக.









11. ஒரு பென்சிலின் விலை ..................
12. ஒரு பேனையின் விலை ..................




13. ஒரு மாம்பழத்தின் விலை ................
14. 1 தோடம்பழத்தின் விலை ................
15. அன்னாசிப்பழத்தின் விலை ..............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமானம் காண்க

16. ♣ = .............

17. ♥ = .............

18. ♦ = .............

19. ♣ + ♥ = .............

20. ♥ + ♣ + ♦ = .............

21. ♥ - ♦ - ♦ = .............

22. ♦ + ♦ + ♣ + ♣ + ♣ = .............

| | | | |
|---|---|---|---|
| ♣ | ♣ | ♥ | ரூ.55 |
| ♥ | ♣ | ♦ | ரூ.60 |
| ♣ | ♥ | ♥ | ரூ.65 |
| ரூ.55 | ரூ.55 | ரூ.70 | |

பின்வரும் பிரசினங்களைத் தீர்க்க.

23. சிறிய சொக்லேட் பைக்கற் ஒன்றின் விலை ரூபா 5.25 ஆகும். அவ்வாறான 8 பைக்கற்களை வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

.......................................................

24. தண்ணீர்க் கோப்பை 8 இன் விலை ரூபா 84.00 ஆகும்.

1. தண்ணீர் கோப்பை ஒன்றின் விலை எவ்வளவு? ..................................
2. தண்ணீர் கோப்பை 5 இன் விலை எவ்வளவு? ..................................

25. 1*l* டீசலின் விலை ரூபா 24.50 ஆகும். 8*l* டீசல் வாங்க தேவையான பணம் எவ்வளவு?

.......................................................

26. இறப்பர் பந்து ஒன்றின் விலை ரூபா 15.00 ஆகும். அவ்வாறான 7 இறப்பர் பந்துகளின் விலை எவ்வளவு?

.......................................................

27. பிஸ்கட் பைக்கற் ஒன்றின் விலை ரூபா 11.50 ஆகும். அவ்வாறான 9 பிஸ்கட் பைக்கற்களின் விலை எவ்வளவு?

.......................................................

28. 1*l* பாலின் விலை ரூபா 15.75 ஆகும். அவ்வாறான 5*l* பாலின் விலை எவ்வளவு?

.......................................................

39. 1kg சம்பா அரிசியின் விலை ரூபா 30.50 ஆகும். எனவே, 6kg அரிசியை வாங்கி அதற்காக ரூபா 200 ஐ கடைக்காரருக்குக் கொடுத்தால் மீதியாக கிடைக்கும் பணம் எவ்வளவு?

.......................................................

30. யோகட் ஒன்றின் விலை ரூபா 25.50 ஆகும். அவ்வாறான 5 யோகட்களின் விலை எவ்வளவு?

.......................................................

31. 1m துணியின் விலை ரூபா 48 ஆகும். அவ்வாறான 6m துணியின் விலை எவ்வளவு?

.......................................................

32. 1m பலகை துண்டின் விலை ரூபா 34.50 ஆகும். அவ்வாறான 4m பலகை துண்டு 6 இன் விலை எவ்வளவு?

## சுற்றாடல் (வீட்டுத்தோட்டம்)

சரியான விடை

1. வீட்டுத்தோட்டத்தில் நடக்கூடிய பழவகைகள் எவை?
   i. பயறு, கௌபி   ii. மா, தோடை
   iii. வெண்டி, பாகல்

2. ஆரோக்கியமான வித்தொன்றின் இயல்பாக அமையாதது?
   i. வித்து பூச்சிகளால் தாக்கப்பட்டிருத்தல்.
   ii. நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல்.
   iii. மேற்றோல் மேடு பள்ளமின்றி பளபளப் பாக இருத்தல்.

3. வித்துக்கள் முளைத்து வளர்வதற்கு அவசிய மான காரணிகளில் ஒன்று?
   i. நீர்   ii. பசளை   iii. இடவசதி

4. தண்டுத் துண்டுகளை நட்டு புதிய கன்றுகளை பெறக்கூடிய தாவரம் எது?
   i. பப்பாசி   ii. கடுகு
   iii. கங்குன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உறிஞ்சிகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் எது?

i. வாழை ii. தென்னை
iii. பலா

6. தானியப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள் என்பவற்றிற்கு தீங்கு செய்யும் பிராணி எது?

i. கிளி ii. எலி
iii. அணில்

7. அந்துப் பூச்சிகளினால் நெற்பயிர்களுக்கு ஏற்படும் நோய் என்ன?

i. அழுகல் நோய் ii. வெண்சாவி
iii. அடியழுகல்

8. கத்தரி, தக்காளி, வெண்டி போன்ற பயிர்களைச் சேதப்படுத்தும் பிராணி எது?

i. மீலி முட்டைப்பூச்சி ii. எலி
iii. செண்பகம்

9. பயிர்த்தாவரங்களைச் சேதப்படுத்தும் பிராணிகள் எவை?

i. காட்டுப்பன்றி, எலி ii. காகம், தேனீ
iii. செண்பகம், வண்ணத்துப்பூச்சி

10. சூழல் நேயப் பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவம் தயாரிக்கப்பயன்படுவது எவற்றின் மூலம்?

i. கடுகு, மிளகு ii. சுக்கு, திப்பிலி
iii. வேப்பங்கொட்டை, வேப்பெண்ணெய்

11. பந்தல் இட்டுப் படர விடப்படும் பயிர்கள் எவை?

i. புடோல், திராட்சை
ii. வெண்டி, தக்காளி
iii. மிளகாய், கத்தரி

12. மிக விரைவாக முளைக்கக் கூடிய வித்துவகை எது?

i. மா ii. பயறு iii. மரமுந்திரி

13. பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தாத பூச்சி எது?

i. வெண்மூட்டுப்பூச்சி ii. கறையான்
iii. நுளம்பு

14. சாடிகளில் பயிரிடும்போது மேலதிக நீரை வெளியேற்ற சாடிகளின் அடியில் இடப்படுவது என்ன?

i. துளைகள் ii. வைக்கோல்
iii. சிறுகற்கள்

15. தோட்டத்திற்கு அழகு, பாதுகாப்பு என்பவற்றைத் தருவது எது?

i. வேலி
ii. வெருளி
iii. களைகள்

16. தென்னம் ஓலைகளைத் தாக்கும் பூச்சி வகை எது?

i. மயிர்கொட்டி
ii. காண்டாமிருக வண்டு
iii. எறும்புதின்னி

17. பூச்சிகள் பயிர்களை நெருங்கவிடாது தடுப்பதற்காக நடப்படும் வெறுப்பூட்டும் பயிர் வகைகள் எவை?

i. ரோசா, மல்லிகை
ii. தாமரை, அல்லி
iii. செவ்வந்தி, சூரியகாந்தி

18. நேரடி சூரிய ஒளியில் வளரும் தாவர வகை எது?

i. தென்னை ii. நெல்
iii. கங்குன்

19. கிருமி நாசினி தெளிப்பதனால் ஏற்படும் பாதிப்புகளில் ஒன்று?

i. சூழல் மாசடையாது
ii. மண்வளம் குன்றும்
iii. உயிராபத்துக்கள் ஏற்படாது

20. நோய்வாய்ப்பட்ட தாவரமொன்றில் காணப்படும் குணம் அல்லாதது எது?

i. வளர்ச்சி குன்றாதிருக்கும்
ii. சில கிளைகள் இறந்து காணப்படும்
iii. இலைப் பரப்புகளில் புள்ளிகள் காணப்படும்

21. சிறுதோட்டப் பயிர்வகைகள் பின்வருவனவற்றுள் எது?

i. குரக்கன், தினை
ii. கரட், பீட்ரூட்
iii. ஏலம், கறுவா

22. அறுவடையுடன் தொடர்புடைய ''குஞ்சு வாயன்'' என்பது,

i. நெல்லை அளக்கும் பெட்டி
ii. சிறிய வாய்
iii. பெரிய பெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. வீட்டுத்தோட்டத்தில் வளரும் களை, பூண்டுகள் எவை?

i. பயறு, அவரை
ii. அறுகு, கோரைப்புல்
iii. பாகல், புடோல்

24. சாம்பலில் இட்டுப் பிசைந்து உலர்த்தப்பட்டு நடப்படும் வித்துக்கள் எவை?

i. பூசணி, கொடித்தோடை
ii. மா, பலா
iii. கத்தரி, வெண்டி

25. பீடைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய பாரம் பரிய முறை அல்லாதது?

i. கிருமி நாசினி தெளித்தல்
ii. முசுறு கூடுகளைப் போடுதல்
iii. புகைமூட்டுதல்
iv. சாம்பல் இடல்

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் எழுதுக.**

தென்னம்பொச்சி / மூன்று / செவ்வந்தி / கறிவேப்பிலை / அசேதன / இலையரி / வைரமான / வெண்டி / வெண்சாவி / சூழல் / பாகல், அவரை / மஞ்சள் நிறம் / கத்தரி / மிளகாய் / தயிர்ச்சட்டி / அணில், வௌவால் / வெங்காயம்

26. வீட்டுத்தோட்டத்தில் நடக்கூடிய கொடிவகை களுள் ................ என்பனவும் அடங்கும்.

27. .................. வித்துக்களை நட்டு புதிய நாற்றுக்களைப் பெறக் கூடிய தாவரம் ஆகும்.

28. நடுவதற்கான தண்டுத் துண்டங்கள் ............ ................தண்டுத் துண்டங்களாக இருக்க வேண்டும்.

29. .................. என்பன வாழைப்பூவை நாடி வரும் பிராணிகள் ஆகும்.

30. அமோனியா .................... பசளை ஆகும்.

31. காய்கள் கடும் நிறத்திலிருந்து இளநிறமாகும் போது அறுவடை செய்யப்படுவது ............ .............. ஆகும்.

32. மாற்றுமுறை பயிர்ச் செய்கைக்கு ............ ............ பயன்படும்.

33. நெற்பயிரை தாக்கும் ஒரு நோய் .............. .......... ஆகும்.

34. நெற்கதிர் முற்றி ................ ஆக இருக்கும் பருவத்தில் அறுவடை செய்தல் வேண்டும்.

35. ..................... புழுக்கள் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும்.

36. நுனிப் பகுதியை விரலால் உடைக்கக் கூடிய நிலையில் இருக்கும் போது ................... அறுவடை செய்வது சிறந்தது.

37. சுற்றாடலில் கிடைக்கும் பல்வேறு பொருட்களி னாலான சாடிவகைகளில் ....................யும் ஒன்றாகும்.

38. பூச்சிக் கட்டுப்பாட்டுத் திரவத்தை பயன்படுத்து வதனால் ..................... மாசடையாது.

39. பூச்சிகளுக்கு ............................ சோடி மூட்டுக்கால்கள் காணப்படும்.

40. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பிராணி களை விரட்ட ..................... பூக்கள் பயன் படுத்தப்படுகின்றன.

41. ...................... கறிக்கு சுவையூட்ட உதவும் இலைவகை ஆகும்.

42. நிலக்கீழ் தண்டு மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் .................... ஆகும்.

**சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குள் அடையாளம் இடுக.**

43. மரமுந்திரி வீட்டுத்தோட்டத்தில் நடக்கூடிய தானிய வகை ஆகும். ( )

44. வித்து முளைத்து வளர்வதற்கு வளி அவசியம். ( )

45. வாழையில் தரமான விளைச்சலைப் பெற அதன் குலையை மூடிக் கட்டுதல். ( )

46. வெற்றிலை, மிளகு போன்ற கொடிகள் மரங்களில் படர விடப்படும். ( )

47. காட்டு யானை பயிர்களுக்கு சேதம் விளை விக்காத பிராணி ஆகும். ( )

48. பன்றி, எலி என்பன கிழங்குப் பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும். ( )

49. மண்புழு மண்வளியை அதிகரிக்கச் செய்யும். ( )

50. வெள்ளைப்பூண்டை பயன்படுத்தியும் பூச்சிக் கட்டுப்பாட்டு திரவத்தைத் தயாரிக்கலாம். ( )

51. தண்டுகளை நடும்போது அவை நலிந்த தண்டுகளாக இருக்க வேண்டும். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான கூட்டெருவை நாமே தயாரிக்கலாம். ( )

53. வீட்டுத் தோட்டத்தை சுத்தமாக வைத்திருப்பது பயிர்களுக்கு தீங்கு செய்யும் பிராணிகளிடம் இருந்து ஓரளவு பாதுகாப்பு பெறலாம். ( )

54. பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான இடம் மணல் மண்ணைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ( )

55. குறுக்குத் தடிவேலிகள், சாய்வாகக் கம்புகள் நாட்டிக் கட்டப்படுவதாகும். ( )

56. வண்ணத்துப்பூச்சி, பூக்களுக்கு தீமை செய்யும் பிராணி ஆகும். ( )

57. உருளைக்கிழங்கு நாற்றுமேடைகளில் இருந்து பெறக் கூடிய பயிர்க்கன்று. ( )

சுருக்கமான விடைத் தருக.

58. சாடியில் அடியில் நீரை உறிஞ்ச இடப்படும் பொருட்கள் இரண்டு எழுதுக.

........................................

........................................

59. வீட்டுத்தோட்டத்தில் நடக்கூடிய வித்து வகைகள் நான்கு தருக.

........................ ........................

........................ ........................

60. வீட்டுத்தோட்டத்தின் பயன்கள் நான்கு தருக.

........................................

........................................

........................................

........................................

61. தாவரங்களுக்கு பசளையிட வேண்டியதற்கான காரணங்கள் இரண்டு தருக.

........................................

........................................

62. நாம் பயன்படுத்தும் செயற்கை பசளைகள் எவை?

........................................

........................................

63. பழச்சாறு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பழங்கள் நான்கு தருக.

........................................

........................................

........................................

........................................

# தமிழ்

பின்வருவனவற்றில் ஒவ்வொரு வரியிலும் நான்கு சொற்கள் இருக்க வேண்டும். முதலாம் இரண்டாம் சொற்கள் எவ்வகையில் தொடர்புடையனவோ அவ்வகையில் மூன்றாம் நான்காம் சொற்கள் அமையும். அல்லது மூன்றாம் நான்காம் சொற்கள் எவ்வகையில் தொடர்புடையனவோ அவ்வகையில் முதலாம் இரண்டாம் சொற்கள் அமையும். சரியான சொல்லை இனங்கண்டு அதன் இலக்கத்தை விடைக் கோட்டில் எழுதுங்கள்.

1. உப்பு : உவர்ப்பு : கரும்பு : ..............
   i. புளிப்பு ii. இனிப்பு
   iii. உறைப்பு iv. கைப்பு

2. பலா : ........... : மாம்பழம் : சதை
   i. கொட்டை ii. சாறு
   iii. சுளை iv. முத்து

3. சோலை : பூங்கா : தாமரை : ..............
   i. இலை ii. குளம்
   iii. கமலம் iv. நீர்

4 .......... : பசு : கடா : மறி
   i. நாகு ii. நாம்பன்
   iii. எருது iv. மாட

5. குற்றம் : தண்டனை : வேலை : .............
   i. சம்பளம் ii. முதலாளி
   iii. ஓய்வு iv. உணவு

6. ஐ : ஓ : ஞாயிறு : ..................
   i. திங்கள் ii. செவ்வாய்
   iii. புதன் iv. வியாழன்

7. குதிரை : வால் : மயில் : ............
   i. இறகு ii. வெடிவால்
   iii. தோகை iv. சிறகு

8. நரி : ............. : பசு : சாந்தம்
   i. கோபம் ii. தந்திரம்
   iii. சண்டை iv. அச்சம்

9. மரம் : கட்டில் : .............. : கத்தி
   i. செம்பு ii. தங்கம்
   iii. இரும்பு iv. மண்

10. ............ : வன்மை : பஞ்சு : நொய்ம்மை
   i. கல் ii. பால்
   iii. மரம் iv. பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எண்ணங்களின் வண்ணங்கள் - 32

## தலைப்பு: கடற்கரைக் காட்சி


### பரிசில் பெறும் சித்திரங்கள்



எம்.எச். ஹஷீப்
ஸாஹிரா கல்லூரி
மாவனல்லை



எம்.எஸ்.எப். ஹப்லின்
கமு/மஹ்மூத் ம.க.
கல்முனை



என். சகீதா
அல் ஹிக்மா பெ.அ.க.
இறக்காமம்

### பாராட்டுக்குரிய சித்திரங்கள்



எஸ்.எப். ஸபானிய்யா
அ/ஜாயா மு.ம.வி.
கட்டு கெலியாவ



எம்.ஆர்.எப். பிராஸா
முஸ்லிம் ம.ம.வி.
சம்மாந்துறை



ஏ.எஸ். அருஸ்டீன்
இஸ்மாயில்புரம்
புத்தளம்



எம். நிமாஸா
தி/அந் நூரியா மு.ம.வி.



ஏ.ஆர்.எப். ரிஸ்லா
ஜாமியுள் அஸ்ஹர் ம.க.
உடதலவின்ன



மபாஸா றஸீம்
மக எலகமுவ
கெகிராவ



எம்.என்.எப். நிதா நிஸ்தார்
கிரி/கெகுணகொல்ல தே.பா.



என். ஹிஸாம் அஹமட்
அ/ஜாயா மு.ம.வி.
கட்டு கெலியாவ



எப்.ஏ.எப். பஸ்ரிபா
மட்/தியாவட்டவான் அறபா வி.
நாவலடி



ஏ.எல். இஜாஸ் அஹமட்
தி/அன் நஜாத் ம.வி.
கிண்ணியா



எஸ்.டி. சஹ்ரானியா
குளி/[illegible] ம.க.வி.



அப்துல் றஸீம் மஹ்ஸா
அ/கெகிராவ மு.ம.வி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Readers' Paradise

தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

(வேறு கிளைகள் எதுவும் கிடையாது...) www.ibh.lk

**ஒரே கூரையின் கீழ்**
**தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...**

## ONLINE ORDERS & VPP ORDERS

- புனித அல்குர்ஆன் பிரதிகள்
- அகராதிகள்
- உளவியல் நூல்கள்
- தர்ஜுமாக்கள்
- கதைப் புத்தகங்கள்
- இஸ்லாமிய நூல்கள்
- அல் ஹதீஸ் தொகுப்புக்கள்
- வரலாற்று நூல்கள்
- இலக்கியத் தொகுப்புக்கள்
- இலக்கண நூல்கள்
- கவிதைத் தொகுப்புக்கள்
- சமையல் புத்தகங்கள்
- பாடசாலை துணை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/DVD



**7 Days Open**

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்...

You Ring 011 573 6098 We Bring

**Loyalty Card**
**Now Available**



புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks என Type செய்து
40404 க்கு அனுப்புங்கள்.

IBH இன் இலவச விநியோகம்
தற்போது உங்கள் வீடுகளுக்கே...
(நகர எல்லைக்குள் மாத்திரம்)



**அதிகாலை 7:00 மணியிலிருந்து இரவு 9:00 மணி வரை உங்களுக்காக திறந்திருக்கும்**

**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road | Maradana | Colombo- 09
Web: www.ibh.lk | Phone: [illegible]

வெளியீடு மொத்த விற்பனை பகுதி : 0115 736098, 0772518641
தபால் மூலம் நூல்களைப் பெற : 011 2684851
புனித அல்குர்ஆன் பிரதிகளை மொத்தமாக பெற : 0773171725


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org